UNIVERSAL LIBRARY
OU_208182
UNIVERSAL LIBRARY

திருச்சிற்றம்பலம்

# குமரகுருபர அடிகளின்

# வரலாற்றுச் சுருக்கம்

பாண்டி நாட்டிலேயுள்ள ஸ்ரீவைகுண்டத்திலே சைவவேளாளர் குலத்திலே சண்முக சிகாமணிக் கவிராயரும் அவர் மனைவியார் சிவகாமி யம்மையாரும் செய்த தவப்பயனாக ஒரு புதல்வர் பிறந்தனர். அப் புதல்வர் ஐந்தாண்டளவும் பேசாதிருந்தமை கண்ட பெற்றோர் திருச்செந்தூர் சென்று முருகக்கடவுளை வழிபட அப்பெருமான் அருளால் அம் மகனார் ஊமை நீங்கிச் சைவசித்தாந்தப் பொருணுட்பஞ்செறிந்து விளங்கும் '**கந்தர்கலிவெண்பா**' என்னும் பாடலை அப் பெருமான்மீது புகழ்மாலையாக அருளிச் செய்தனர். முருகக் கடவுள் அவா கனவிலே குமரவடிவங் கொண்டு 'நீ குருபரனாகுக' என்றருளியதால், அன்றுமுதலாக அவர் **குமரகுருபர**ரென அழைக்கப்பட்டார்.

முருகக் கடவுள் ஆணைப்படி குமரகுருபரர் ஒருகால் வடதிசைச் செல்லும்போது '**மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**' பாட, அக்காலத் தரசாகிய திருமலை நாயகா மீனாட்சியம்மையருளால் அதனைத் தெரிந்து அப் பிள்ளைத்தமிழை அம்மையார் திருமுன் அரங்கேற்றுவித்தனர். அப் பிள்ளைத்தமிழின் வருகைப் பருவத்து ஒன்பதாவது செய்யுளாகிய 'தொடுக்குங் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே' என்று தொடங்குஞ் செய்யுளுக்குக் குமரகுருபரர் பொருளுரைக்கும் பொழுது மீனாட்சியம்மையார் கோயிற் பட்டரின் பெண் போன்று திருக்கோலங்கொண்டு அரசர் கழுத்திலணிந்திருந்த மணிவடத்தைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினர். குமரகுருபரர் பின்னர் '**மீனாட்சியம்மை குறம்**' '**மீனாட்சியம்மை யிரட்டைமணிமாலை**' '**மதுரைக்கலம்பகம்**' '**நீதிநெறிவிளக்கம்**' என்பனவற்றை யியற்றியருளினார்.

பின்பு திருவாரூர் சென்று தியாகராசப் பெருமானை வணங்கித் '**திருவாரூர்நான்மணிமாலை**' என்னும் நூலினைக் குமரகுருபரர் பாடினர். அப்பால் தருமபுரஞ் சென்று அங்கே நான்காவது அருளாசிரியரா யெழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகரிடம் அறிவுறுப்புப் (ஞானோபதேசம்) பெற விரும்பி அவராணைப்படி சிற்றம்பலஞ் செல்லப் புறப்பட்டு வைத்தீசுரன்கோவில் அடைந்து குமரக்கடவுள்மீது '**முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ்**' என்னும் நூலினைப் பாடினர். பின் தில்லைக்குச் சென்று கூத்தப் பெருமான் மீது '**சிதம்பரமும்மணிக்கோவை**' '**சிதம்பரச்செய்யுட்கோவை**' என்னுமிரண்டு நூல்களையும், அம்மைமீது '**சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை**' என்னும் நூலையும் பாடினர். பின் தருமபுரஞ் சாரவும் மாசிலாமணி தேசிகர் அவருக்கு அறிவுறுத்தருளினர். அவ்வருளை வியந்து தம்மாசிரியர்மீது '**பண்டாரமும்மணிக் கோவை**' யென்னும் நூலைப் பாடி அதனை அவ்வாசிரியர்க்குச் சார்த்தப் பெற்றனர்.

பின்னர் அம் மாசிலாமணிதேசிகர் ஆணைப்படி தமக்குத் திருமலை நாயகராற் கொடுக்கப்பட்ட பொருளைக்கொண்டு காசிக்குப்போய், விசுவநாதப் பெருமான்மீது '**காசிக்கலம்பகம்**' என்னும் நூலைப் பாடினர். அந் நாட்டு மகம்மதிய அரசனிடம் மடங் கட்ட இடம்பெற விரும்பிக், கலைமகள்மீது '**சகலகலாவல்லி மாலை**' பாடி இந்துஸ்தான் மொழியையறிந்து, அரசனிடம் சென்று பல அருஞ் செயல்களை நிகழ்த்தி அவ் வரசனால் இடம் தரப் பெற்றுப் பல சைவ மடங்களும் கேதாரநாதர் திருக்கோயிலும் அமைத்தனர்.

பின்னர் மூன்றுமுறை தருமபுரம் வந்து தம் ஆசிரியரைக் கண்டு வணங்கிக் காசிக்குப் போய்ச் சைவசமய வளர்ச்சி கருதிச் சில அறச்செயல்களைப் புரிந்து காசியில் ஒரு வைகாசித் திங்கள் கிருஷ்ணபக்கத் திருதியையில் இறைவனோடு இரண்டறக் கலந்தனர்.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

# மதுரைக் கலம்பகம்

## மூலமும் குறிப்புரையும்

கலம்பகமாவது, தொண்ணூற்றாறுவகை நூல்களில் ஒன்று. இதனுள் முதலிற் பாட்டுறுப்பாக மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும் வெண்பாவுங் கலித்துறையும் கூறப் படும். பின்னர் மருட்பா ஆசிரியப்பா கலிப்பா ஆசிரிய விருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சித்துறை வஞ்சி விருத்தம் முதலியன வரும். இந்நூலில் புயவகுப்பு மதங்கு அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புக்களும் காலத்தால் மருவிய பிச்சியார் கொற்றியார் இடைச்சியார் வலைச்சி யார் முதலியனவும் வரும். இஃது அந்தாதியாகச் செய்யப் படும்; இடையிடையே வெண்பாவும் கலித்துறையும் மடக்குச் செய்யுளும் விரவி வரும்.

கலம்பகம் தெய்வத் தொடர்பாகப் பாடுங்கால் நூறு செய்யுளுடையதாயும், அந்தணர் முதலிய நால்வர் தொடர் பாகப் பாடுங்கால் முறையே தொண்ணூறு எழுபது ஐம்பது முப்பது செய்யுளுடையதாயும் பாடப்படும்.

கலம்பகத்தின் இலக்கணத்தைப் பாட்டியல்களுட் கண்டு கொள்க.

## காப்பு

### கட்டளைக்கலித்துறை

*புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறுதொந்தித்*
*தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்பதென் றண்ணளிதூய்*
*வந்திப் பதுந்தனி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று*
*சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேவடியே.*

(**குறிப்புரை**) தடம் - மலைப்பக்கம். தடத்துப் பிளிறு எனக் கூட்டுக. விநாயகப்பெருமான் புலக்களிறுகள் ஓடுமாறு புந்தித் தடத்துப் பிளிறுகின்றமை கூறினார். சந்தை தமிழ - தந்தையார் மீது பாடப்படும் இத் தமிழ்நூல. அளி - அன்பாகியமலர். அலாதூய் என்பதும் பாடம்.

## நூல்

### மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா

### (க) இஃது எட்டடித்தரவு

*மணிகொண்ட திரையாழி சுரிநிமிர மருங்கசைஇப்*
*பணிகொண்ட முடிச்சென்னி அரங்காடும் பைந்தொடியும்*
*பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த புனத்துழாய் நீழல்வளர்*
*தேந்தத்து நறைக்கஞ்சத் தஞ்சாயல் திருந்திழையும்*
*மனைக்கிழவன் திருமார்பும் மணிக்குறங்கும வறிதெய்தத்*
*தனக்குரிமைப் பணிபூண்டு முதற்கற்பின் தலைநிற்ப*
*அம்பொன்முடி முடிசூடும் அபிடேக வல்லியொடும்*
*செம்பொன்மதில் தமிழ்க்கூடல் திருநகரம் பொலிந்தோயகேள்.*

### (உ) இவையாறும் ஈரடித்தாழிசை

*விண்ணரசும் பிறவரசும் சிலரெய்த விடுத்தொருநீ*
*பெண்ணரசு தரக்கொண்ட பேரரசு செலுத்தினையே;*

*தேம்பழுத்த கற்பகத்தி னறுந்தெரியல் சிலர்க்கமைத்து*
*வேம்பழுதது நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே;*

*வானேறும் சிலபுள்ளும் பலரங்கு வலனுயர்த்த*
*மீனேறு வானேறும் விடுத்தடிகள் எடுப்பதே;*

மனவட்டம் இடுஞ்சுருதி வயப்பரிக்கு மாறன்றே
கனவட்டம் தினவட்டம் இடக்கண்டு களிப்பதே;

விண்ணுறு தலைமடுப்ப நனையாநீ விரைப்பொருநைத்
தண்ணுறு குடைந்துவைகைத் தண்துறையும் படிந்தனையே;

பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகும் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே.

(௩) இவைநான்கும் ஈரடியாராகம்

அவனவள் அதுவெனும் அவைகளில் ஒருபொருள்
இவனென உணர்வுகொ டெழுதரும் உருவினை;

இலதென உளதென இலதுள தெனுமவை
அலதென அளவிட அரியதோர் அளவினை;

குறியிலன் அலதொரு குணமிலன் எனநினை
அறிபவர் அறிவினும் அறிவரு நெறியினை;

இருமையும் உதவுவ தெவனவன் எனநின
தருமையை உணர்வுறின் அழிந்திடும இனிமையை.

(௪) இவைநான்கும் ஈரடித்தாழிசை

வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்கென் றறியேமால் திருமுடிமண் சுமந்ததே;

அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யும் அன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே;

மூலைகொண்டு குழைத்திட்ட மொய்வளைகை வளையன்றே
மலைகொண்ட புயத்தென்னீ வளைகொண்டு சுமந்ததே;

ஊன்வலையில் அகப்பட்டார்க் குட்படாய் நின்புயத்தோர்
மீன்வலைகொண் டதுமொருத்தி விழிவலையிற் பட்டன்றே.

(ரு) இவைநான்கும் முச்சீரோரடி யம்போதரங்கம்

போகமாய் விளைந்தோய்நீ; புவனமாய்ப் பொலிந்தோய்நீ
ஏகமா யிருந்தோய்நீ; யெண்ணிறந்து நின்றோய்நீ.

(சு) இவையெட்டும் இருசீரோரடி அம்போதரங்கம்

வானு நீ, நிலனு நீ, மதியு நீ, கதிரு நீ,
ஊனு நீ, உயிரு நீ, யுளது நீ, இலது நீ.

(எ) இது தனிச்சொல்

எனவாங்கு,

(அ) இது பத்தொன்பதடி நேரிசையாசிரியச்சுரிதகம்

பொன்பூத் தலர்ந்த கொன்றைபீர் பூப்பக்
கருஞ்சினை வேம்பு பொன்முடிச் சூடி
அண்ணலா னேறு மண்ணுண்டு கிடப்பக்
கண்போற் பிறழுங் கெண்டைவல னுயர்த்து
வரியுடற் கட்செவி பெருமூச் செறியப்
பொன்புனைந் தியன்ற பைம்பூண் தாங்கி
முடங்குளைக் குடுமி மடங்கலந் தவிசிற்
பசும்பொனசும் பிருந்த பைம்பொன்முடி கவித்தாங்
கிருநிலங் குளிர்தூங் கொருகுடை நிழற்கீழ்
அரசுவீற் றிருந்த ஆதியங் கடவுள்நின்
பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுதும்
ஐம்புல வழக்கின் அருஞ்சுவை அறியாச்
செம்பொருட் செல்வநின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினும் ஒழிக
பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் றரூஉம்
இறைமையுண் டாயினு மாக குறுகினின்
சிற்றடி யவர்க்கே குற்றேவல் தலைக்கொண்
டம்மா கிடைத்தவா வென்று
செம்மாப் புறாஉந் திறம்பெறற் பொருட்டே.

## (க) எட்டடித் தரவு

(கு - ரை.) சரி - மடிப்பு. அசைஇ - உடுத்து. ஆழியாகிய ஆடை மடிப்பு உலையும்படி உடுத்து என்க. பணி - ஆதிசேடன் என்னும் பாம்பு. பைந்தொடி - பசுமையாகிய வளையலை அணிந்தவள், ஈண்டு நிலமகள். திருந்து இழை - திருந்திய அணிகளையணிந்தவள், ஈண்டுத் திருமகள். மனைக்கிழவன் - கணவன்; திருமால். குறங்கு - தொடை. தனக்கு - அபிடேக வல்லியாகிய மீனாட்சியம்மையாருக்கு. முதற் கற்பு என்றது, கணவன் நலங் கருதி அவனாற் காட்டப்பட்ட கடவுளை வழிபடுதலெனக் கொள்க.

## (உ) ஆறு ஈரடித்தாழிசை

சிலபுள் என்றதில், சில என்பது ஈண்டு இரண்டையுணர்த்திற்று. வானேறும் சிலபுள் - விண்ணிற் பறககும் கருடனும் அன்னமும். மீன்ஏறு - மீனாகிய ஏறு, மீன்கொடி. மனம் வட்டமிடும் - மனத்தில் சுற்றுகின்ற மறைகளை நினைந்து பார்த்து உணர வேண்டுதலின் 'மன வட்டமிடுஞ் சுருதி' என்றார். இங்கு வட்டமிடுதலென்பது எண்ணி யெண்ணிப் பலகாலும் ஆராய்தல். கனவட்டம் - பாண்டிய அரசனது குதிரையின் பெயர். விண் ஆறு - வானநதி, கங்கை புததமுதம் - புதுமை + அமுதம்; அஃதாவது முன்பின் உண்டறியாத புதுவதாய்க் கிட்டிய அமிழ்தம். அதைப் போன்றதெனத் தமிழ்மொழியின் இனிமைக்கு அடைகொடுததார். வழிந்து ஒழுகும் - பெருகயெடுத்தோடுகின்ற.

## (௩) நான்கு ஈரடி அராகம்

இலதுநீ என்றது, தருக்க நூலார் இல்லாமையைப் பொருளாகக் கொண்டதுபற்றி. உணர்வுகொடு - அறிவின் தன்மையால். உருவினை - உருவத்தையுடையாய். குறிஇலன் - உருவில்லாதவன். குணம்இலன் - குணங்களைக் கடந்தவன். இருமை - இம்மை மறுமையாகிய இரண்டு.

## (௪) நான்கு ஈரடித்தாழிசை

நீர்தேவியைத் தன் சடைக் கற்றையிலடக்கிய பெருமானுக்கு அதன் கூறாகிய வைகையின் பெருக்கினை அடைத்தல் எளிதேயாகவும், அப்பெருமான் மண்சுமந்த செயலானது இன்னதற்கென்று யாமறிய வாராததாயிற்று என்க. அரும்பு இட்டு - மலர்களைக்கொண்டு. பிட்டு - பிட்டாகிய உணவு. பிட்டிரண்ட

னுள், முன்னது பெயர், பின்னது வினை. பிட்டு - பிய்த்து. பிதிர்தது. மொய்வளை - உமைத்தேவியார். வளை - வளையல்; இங்கே குறிக்கப்பட்டது **வளையல் விற்ற திருவிளையாடல்.** மலை கொண்ட - மலையைப் போன்ற ஊன் - இங்கே உடம்பு. உயிரை மீனாகக் கருதி உடம்பை வலை என்றார். வலை - கட்டு. உமையம்மை பரதவர் மகளாகப் பிறந்து வளர அவரை மணத்தற்குச் சிவபெருமான் வலைஞனாய் வந்தமையின் 'ஒருததி விழிவலையிற் பட்டு' என்றார்.

## (௫) நான்கு முச்சீர் ஓரடி அம்போதரங்கம்

போகம் - நுகரப்படும் பொருள். புவனம் - உலகம். பொலிந்தோய் - விளங்குவோய். ஏகம் - ஒன்று. ஒப்பற்ற ஒரு பொருளாய் நின்றாய் என்றபடியாம். எண் இறந்து - அளவு கடந்து.

## (௬) எட்டு இருசீர் ஓரடி அம்போதரங்கம்

வான் - வானம்; விசும்பு. மதி - திங்கள். கதிர - ஞாயிறு. ஊன் - உடம்பு. உளது - உள்ளபொருள். இலது - இல்லாத பொருள். எல்லாப் பொருள்களும் நீயே என்றபடி.

## (௭) தனிச்சொல்

என ஆங்கு - அசைநிலை.

## (௮) பத்தொன்பதடி நேரிசை ஆசிரியச் சுரிதகம்

பீர் - பசலை. சிவபெருமான் கொன்றையந்தார் தணந்து, விடைநிறுத்தி, நச்சு நாகக் கலனகற்றி, வேப்பந்தொடை முடித்துக், கயலெடுத்து, மாணிக்கச சுடாப்பூண் எந்தினமையின், முன் கொண்ட அவை பீர்பூத்தும் மண்ணுண்டும் பெருமூச செறிந்தும் கிடப்பனவாயின. முடங்கு உளை-மடங்கிய பிடரிமயிர். மடங்கல்-சிங்கம். அசும்பு இருத்தல் - நெகிழ்ந்து தோன்றல். சின்மலர் என்பதிலுள்ள சில என்பதற்கு முன் 'சில புள்' என்பதற்கு உரைத்ததே கொள்க. ஐமபுல வழக்கின் அருஞ்சுவையறியாச செம்பொருட் செல்வ - சுவையொளி முதலான ஐந்து புலன்களின் வழித்தோன்றும் இன்பத்தினை யறியாத செம்பொருளாகிய செல்வனே; அஃதாவது ஐம்புல அவா இல்லாதவனென்பது. ஐம்புலவுணர்ச்சிக்கு எட்டாத செல்வனே என்றுமாம். தொழும்பு - அடிமைத் தொழில். பழிச்சுதும் - வணங்குவோம். அம்மா: வியப்பிடைச் சொல். பொருட்டுப் பழிச்சுதும் என முடிக்க. (௧)

## நேரிசை வெண்பா

பொருளுணன் கொருங்கின்ற பொன்மாடக் கூடல்
இருளுணன் றிருண்டகண்டத் தெம்மான்—சரணன்றே
மண்துழா யுண்டாற்குக் கண்மலரோ டொண்மலிநத்
தண்துழாய் பூத்த தடம்.

(கு - ரை.) இருள் - இங்கே நஞ்சு நான்று - பொருந்திய தால். தடம் - குளம்; மலைப்பக்கம் என இரு பொருளில் வந்தது; திருமால் ஆழிபெறும்பொருட்டுக் கணமலராகிய தாமரையைச சாத்துதலின் குளமென்ற பொருளும், சிவபெருமானை அவர் வணங்கும்பொழுது முடியி லணிந்த துழாய் சிவபெருமான் திரு வடியிற் பதிதலின் மலைப்பக்கமென்ற பொருளும் பொருந்துமாறு காண்க உ

## கட்டளைக்கலித்துறை

தடமுண் டகங்கண் டகத்தாள தென்றுநின் தண்மலர்த்தாள்
நடமுண் டகமகங் கொண்டுய்ந்த வாவினி நங்களுக்கோர்
திடமுண் டகந்தைக் கிடமுண் டிலையெனத் தேறவிண்ணோர்
விடமுண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே.

(கு - ரை.) தட முண்டகம் - குளத்தில் தோன்றுந் தாமரை. கண்டகம் - முள். தாளது - நாளத்தை யுடையது. அதனை நீக்கி என வருவித்துக் கொள்க. உண்டு - உட்கொண்டு. அகம் அகங்கொண்டு - நெஞ்சம் செருக்குக் கொண்டு. உண்டிலை - உளதாதலில்லை. விண்ணோர் தேற என்க. கந்தர சுந்தர - கழுத்தின் அழகுடைய; தொகையுமாம். ங

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மீனேறுங் கொடிமுல்லை விடுகொல்லைக் கடிமுல்லை
வெள்ளைப் பள்ளை
ஆனேறும் வலனுயர்த்த அழகியசொக் கர்க்கிதுவும்
அழகி தேயோ
கானேறுங் குழல்சரியக் கர்ப்பூர வல்லிதலை
கவிழ்ந்து நிற்ப
ஊனேறு முடைத்தலையிற் கடைப்பலிகொண் டூர்புக்
குழலு மாறே.

(கு - ரை.) மீனேறும் ஆனேறும் உயர்த்த சொக்கர் என்க. முல்லைக்கொடி விடுங் கொல்லைகளை யுடைய சிறந்த முல்லை நிலத்தையுடைய வெண்மையும் பருமையுங் கொண்ட திருமாலாகிய ஆனேறென்க. முடைத்தலை - முடைநாற்ற முள்ள நான்முகனது மண்டையோடு. கடைப்பலி - இழிந்த பிச்சை. ச

கட்டளைக்கலித்துறை

மாற்றொன் றிலையென் மருந்துக்கந்
தோசொக்கர் மாலைகொடார்
கூற்றொன் றலவொரு கோடிகெட்
டேன்கொழுந் தொன்றுதென்றற்
காற்றொன் றிளம்பிறைக் கீற்றொன்று
கார்க்கட லொன்றுகண்ணீர்
ஊற்றொன் றிவளுக் குயிரொன்
றிலையுண் டெம்பொன்றுமே.

(கு - ரை) **தலைமகள் தலைமகனது பிரிவுபற்றி வருந்தும் வருத்தங்கண்டு செவிலித்தாய் கூறியது** மருந்து - அமிழ்தம் போன்ற என் மகள். இதனைத் தோழி கூற்றாகக் கொள்ளின் அமிழ்தம் போன்ற என்தலைவி யென்று கொள்க. கூற்று - யமன். கொழுந்து ஒன்று தென்றல் - இளமை பொருந்திய தென்றல். என் மகளுக்குக் கூற்று தென்றல், பிறை, கடல் என்பன. ஊற்றொன்றுதல் - ஊற்றாகப் பெருகுதல். உயிர் ஒன்றிலை - உயிர் சிறிதுமில்லை. இதனால் தலைமகள் சாதற்றுன்பம் போலுந் துன்பம் உறுகின்றாளென்றதாம். இது மக்கட்பெண் கடவுளைக் காமுற்ற பாடாண் பகுதி. இனி வருபவைகளும் இவவாறே காண்க. ரு

விருத்தக்கலித்துறை

ஒன்றே உடம்பங் கிரண்டே இடும்பங் குடம்பொன்றிலார்
என்றே அறிந்தும்பி னின்றே இரங்கென் றிரக்கின்றவா
குன்றே யிரண்டன்றி வெண்பொன் பசும்பொன் குயின்றேசெயும்
அன்றே இருக்கப் புறங்கா டரங்காட வல்லாரையே.

(கு - ரை.) **தலைவி தலைவன்பால் மிக்க காதலுடையவளானமை கண்ட தோழி கூற்று:** ஒருடம்பில் இடும் பங்கு இரண்டு. வெண்பொன் பசும்பொன் என்பவற்றைக் குன்றோடுங் கூட்டி வெள்ளிமலை மேருமலை யென்னு மிரு மலைகளு மல்லாமல் எனப் பொருள் கொள்க. மன்று - சபை. சு

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு
விற்பீர்போல் மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்
லாங்கொள்ளை கொள்கின் றீரால்
பலங்கொண்ட செட்டிமக்குப் பலித்ததுநன்
றுனீரிப் பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட் டீரே.

(கு - ரை.) குலம் கொண்ட - உயர் குலத்திற் பிறந்த. பலம் - பலன்; ஆவது பயன். செட்டி - வணிகம. பலித்தல் - கைகூடுதல், சோமசுந்தரக் கடவுள் வளையல் விற்கப் புறப்பட்ட காலத்துப் பெண்கள்பால் நிகழ்ந்த நிகழ்சசியைக் கண்டாளொருத்தி இவ்வாறு கூறினாள். எ

### நேரிசை வெண்பா

பட்டிருக்கத் தோலசைஇப் பாண்டரங்கக் கூத்தாடு
மட்டிருக்கு நீப வனத்தானே—கட்ட
விருமபரவத தானேநின் மென்மலர்த்தா ளன்றே
தரும்பரவத் தானே தனை.

(கு - ரை.) பாண்டரங்கம் - சிவபெருமான் முப்புர மெரித்த காலத்தில் தேரினின் றாடிய கூத்து. மட்டு - மணம். நீபம் - கடம்பு. மென்மலர்த்தாள் பரவத் தானே தன்னைத் தருமென்க. அ

### கட்டளைக்கலிப்பா

தனியி ருப்பவ ரென்படு வார்கெட்டேன்
சற்று நீதியொன் றற்றவிவ் வூரில்யாம்
இனியி ருப்பவொண் ணாது மடந்தைமீர்
இடம ருங்குஞ் சடைமருங் கும்மிரு
கனியி ருக்குங் கடம்பவ னேசனார்
கண்பு குந்தென் கருத்துள் இருக்கவும்
பனியி ருக்கும் பிறைக்கூற்ற முற்றியென்
பாவி ஆவியை வாய்மடுத் துண்பதே.

(கு - ரை.) கனி-கன்னி யென்பதன் இடைக்குறை. தனித்திருக்கும் தலைவியை நிலவு வருத்த லியல்பு; ஆனால் தலைவன் என் கண் வாயிலாகக் கருத்துட் புகுந்திருப்பவும் அவன் வருத்தல் தகாதென்று நிலவினைப் பழித்ததாயிற்று. மடந்தைமீ ரென்றது பாங்கிகளை.

## நேரிசைவெண்பா

உண்ணமுத நஞ்சாகில் ஒண்மதுரைச் சொக்கருக்கென்
பெண்ணமுத நஞ்சேயோ பேதைமீர்—தண்ணிதழி
இந்தா நிலமே வெனச்சொலார் என்செய்வாள்
மந்தா நிலமே வரின்.

(கு - ரை.) செவிலித்தாய் தலைமகள் பொருட்டு இரங்கிக் கூறியது: இந்தா - இதனைப் பெற்றுக்கொள். நிலம் மேவு - இவ்விடத்தில் பொருந்தி யிரு. நில் அ(ம்)மே - நில் அம்மா, என்னை இனிதொடர்ந்து வாராதே என்று உரைத்தலுமாம். மந்த அநிலம் - தென்றற் காற்று. ௧௦

## புயவகுப்பு

வரியளி பொதுளிய இதழியொ டமரர்
மடந்தையர் நீலவ னம்புக் கிருந்தன;
மதியக டுடைபட நெடுமுக டுடைய
நிமிர்ந்தபொன் மேரு வணங்கப் பொலிந்தன;
மழகதிர் வெயில்விட ஒளிவிடு சுடர்வ
லயங்கொடு லோகம் அடங்கச் சுமந்தன;
மதுகையொ டுதிறல் முறைமுறை துதிசெய்
தணங்கவ ராடு துணங்கைக் கிணங்கின;

பொருசமர் இடையெதிர் பிளிறுமொர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற் றிகின்றன;
புகையெழ அழலுமிழ் சுழல்விழி உழுவை
வழங்குமொ ராடை மருங்குற் கணிந்தன;

புலவெயி றயிறரு குருதியொ டலவு
மடங்கலின் வீரம் ஒடுங்கத் துரந்தன;
புகலியர் குரிசில்பண் ணொடுதமி ழருமை
அறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன;

உருமிடி எனவெடி படவெதிர் கறுவி
நடந்தொரு பாணன் ஒதுங்கத் திரிந்தன;
உருகிய மனமொடு தழுவியொர் கிழவி
கருந்துணி மேலிடு வெண்பிட் டுகந்தன;
உறுதியொ டவள்மனை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடை மணுந்திச் சொரிந்தன;
உருவிய சுரிகையொ டெதிர்வரு செழியர்
பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன;

தருசுவை அமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன;
தளிரியல் மலைமகள் வரிவளை முழுகு
தழும்பழ காக அழுந்தக் குழைந்தன;
தளர்நடை இடுமிள மதலையின் மழலை
ததும்பிய ஊறல் அசும்பக் கசிந்தன;
தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே.

(கு - ரை.) நீலவனம் - இங்கே கண்ணை யுணர்த்திற்று. வணங்குதல் - வளைதல். வலயம் - தோள்வளை; வாகுவலய மென்பது மிது. சிவபெருமானுக்குப் பாம்பு வாகுவலய மாதலின் 'வலயங் கொடு லோக மடங்கச சுமந்தன' என்றார். அணங்கு - பேய். அணங்காகிய அவர் என்க. பேய்கள் பெருமானது வலிமையையும் அடுதிறத்தையும் பாடி ஆடுகின்றன என்க. துணங்கை - ஒருவகைக் கூத்து; அதுதான் இரண்டு கைகளையும் விலாப் பக்கத்தில் முடக்கிவைத்து ஆடும் கூத்து. உழுவை - புலி. மடங்கல் - நரசிங்கமூர்த்தி. புகலியர் குரிசில் - திருஞானசம்பந்த நாயனார். வெடி - கடுங்குரல். கறுவுதல் - சினங் கொள்ளுதல். நடந்த ஒரு பாணன் - ஏமநாதன். உறுதி - வலிவு, அன்பின் வலி

வினாலேயென்க. உந்தி - எழும்பி. செழியர் - இங்கே அரிமர்த்தன பாண்டியர். இளமதலை - முருககடவுள் இதில் சோமசுந்தரக் கடவுளது தோள் புனைந்துரைக்கப் பட்டமையால் இது புய வகுப்பாயிற்று. ௧௧

### கட்டளைக்கலித்துறை

புயல்வண்ண மொய்குழல் பொன்வண்ணந்
தன்வண்ணம் போர்த்தடங்கண்
கயல்வண்ணம் என்வண்ணம் மின்வண்ண
மேயிடை கன்னற்செந்நெல்
வயல்வண்ணப் பண்ணை மதுரைப்
பிரான்வெற்பில் வஞ்சியன்னாள்
இயல்வண்ணம் இவ்வண்ணம் என்னெஞ்சம்
மற்றவ் விரும்பொழிலே.

(கு - ரை.) இஃது, **இயலிடங்கூறல்.** தலைவன் பாங்கன் வினவத் தான் கண்ட வடிவுக்கு இயலுமிடமுங் கூறுகின்றானாதலின். என் வண்ணமும் மின் வண்ணமுமே இடை. என் வண்ணமென்றான் தன் தளர்ச்சி நோக்கி. ௧௨

### அம்மானை, மடக்கு
### கலித்தாழிசை

இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனார்
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனரே ஆமாகில்
அருமையுடம் பொன்றிருகூ றுவதேன் அம்மானை
ஆனாலும் காயமிலை ஐயரவர்க் கம்மானை.

(கு - ரை.) இருவர் திருமாலும் நான்முகனும். விருதுகட்டுதல் - தன் புகழ்மிக்க பெருமை கூறுதல். அங்கம் வெட்டிய வரலாற்றை **திருவிளையாடற் புராணத்தில்** அங்கம் வெட்டிய படலத்திற் காண்க. இவர் வென்றாராயின் அவருடம்பு இரு கூறாயிருப்பது ஏனென்பது வினா. காயம் - தழும்பு, உடல். மூன்று பெண்கள் கூடி உரையாடி அம்மானையாடினார்களென் றறிக. ௧௩

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அம்ம கோவெனும் விழுமழும் எழுந்துநின்
றருவிநீர் விழிசோரும்
விம்மும் ஏங்குமெய் வெயர்த்துவெய் துயிர்க்குமென்
மெல்லியல் இவட்கம்மா
வம்மின் மாதரீர் மதுரையும் குமரியும
மணந்தவர் மலர்த்தாமம்
தம்பி ளேவெனும் தவப்பயன் பெரிதெனும்
தந்தைதாள் எறிந்தார்க்கே.

(கு - ரை.) என் மெல்லிய லிவட்கு அம்மா - மெல்லியலாகிய இவளுக்கு என்ன துன்பம் நேர்ந்தது என்றவாறு. மாதரீர் - தோழியரை விளித்தது. தந்தை தாளெறிந்தார் - சண்டேச நாயனார். அவர் தவப்பயன் பெரிதாகியது, அவர் கொன்றை மாலை பெறுதலால். செவிலித்தாய் தலைமகள் தலைமகனது மாலையை விரும்பி வருந்துதல் கண்டு இரங்கிக் கூறியது. கச

மதங்கியார்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

எறிவேல் இரண்டுமென துயிர்சோர உண்டுலவ
இகல்வாள் இரண்டு விசிறு
வெறிசேர் கடம்பவன மதுரேசர் முன்குலவி
விளையாடு மின்கொ டியனீர்
சிறு நூல் மருங்குலிறும் இறுமாகொல் என்றுசில
சிலைநூ புரஞ்சொல் முறையீ
டறியீரென் னெஞ்சுமல மரவேசு ழன்றிடுநும்
மதிவேக நன்ற றவுமே.

(கு - ரை.) மதங்கியார் என்றது இரண்டு கைகளிலும் இரண்டு வாள் பிடித்து வீசிச் சுழன்றுமே இளம்பெண்ணை விரும்பினனொருவன் தன் வேட்கை தோன்ற அப்பெண்ணிடம் கூறுவ தென்ற இலக்கண முடையது. எறிவேல் என்றது கண்களை. அலமர - சுழல. கரு

## கட்டளைக்கலித்துறை

அறந்தந்த பொன்பொலி கூடற் பிரான்வெற்பில் அம்பொற்படாம்
திறந்தந்த கும்ப மதயா னையுநெடு நேர்ப்பரப்பும்
மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றொருநீ
புறந்தந்த வாவணங் கேநன்று காமவெம் போரினுக்கே.

(த - ரை.) இது, புறங்காட்டல். தலைமகள் கலவியில் மெலிந்ததைத் தலைவன் அவட்குக் கூறுதலின். கும்ப மதயானை கொங்கையையும், தேர்ப்பரப்பு அல்குலையும், விற்படை புருவத்தையும், வாட்படை கண்களையும் குறித்தன. படைகொண்டு பொர வந்த நீ படையின்றி நின்ற எனக்குத் தோற்றமை பொருத்தமன்றென்றவாறு. காமப்போரினுக்கு யான் உடையாதபடி நீ யானை முதலியன கொண்டு என்னைக் காத்தவாறு நன்றென வியந்து கூறிய தென்றலு மொன்று. பொன் - உமையம்மையாரைக் குறித்தது; செல்வமுமாம். திறம் - அழகு; மார்பு. ௧௬

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

போரானை முதுகுறைப்பப் பொறையாற்றும்
சினகரத்துப் புழைக்கை நால்வாய்க்
காரானைப் போர்வைதழீஇ வெள்ளானைக்
கருள்சுரந்த கடவு ளேயோ
ஓரானை முனைப்போருக் கொருகணைதொட்
டெய்திடுநீ ஒருத்தி கொங்கை
ஈரானை முனைப்போர்க்கும வல்லீரேல் ஒருகணைதொட்
டெய்தி டீரே.

(த ரை.) உறைப்ப - வருந்த. பொறை - பொறுத்தல். நால்வாய் - தொங்குகின்ற வாய். வெள்ளானைக் கருள்சுரந்த செய்தியைத் திருவிளையாடற் புராணத்தில் வெள்ளானை சாபந் தீர்த்த படலத்திற் காண்க. ஓரானை யென்றது சோழவரசனால் ஏவி விடப்பட்ட யானையை. இதனை யானை யெய்த படலத்திற் காண்க. ஈரானை - இரண்டு கொங்கைகளை யுணாததிற்று. போர் - கலவியைக் குறித்தது. ஒரு கணை, காமக்கடவுளின் அம்புகளில் ஒன்றாகிய தாமரையையுணர்த்திப் பின் அத் தாமரை போன்ற கையையுணர்த்திற்று. ஆகவே ஒரு கணை தொட்டு எய்திடீரென்று கைகளைப் பிடித்துச் சேரும் என்று பாங்கி விரைந்து எய்துமாறு தலைவனை வற்புறுத்தியவாறும். ௧௭

## மேற்படி விருத்தம்

எய்யாது நின்றொருவன் எய்வதுவும் இளையாள்தன்
இளைப்பும் புந்தி
வையாதார் வைதலுமின் மதியார்தா மதித்திடுதல்
வழக்கே அன்றோ
மெய்யாத மெய்கடிந்து வீடாத வீடெய்தி
வீழார் வீழச்
செய்யாள்செய் சரக்கறையாம் திருவால வாயிலுறை
செல்வ னாரே.

(கு - ரை.) தலைமகள் மேலிவு நோக்கிய பாங்கி தலைவனை வந்து கூடுமாறு உணர்த்தியது: எய்யாது - அறியாது. 'எய்யாமையே அறியாமையே' என்பது தொல்காப்பியம். ஒருவன் - காமக்கடவுள்; உருவமில்லாதவனாதலால் எய்யாது என்று கூறினார். இளையாள் - இளமைப் பருவத்தளாகிய இவள். புந்தி வையாதார் - அறிவிலே ஏற்றுக் கொள்ளாதவர்கள். மதியார் - அறிவுடையோர். மதித்திடுதல் - எண்ணி வந்து கூடுதல். மெய்யாத - மெய்யில்லாத. வீடாத - கெடாத. வீழார் - விரும்பாதார்; இங்கே மெய்யுணர்வினர். செய்யாள் - திருமகள். மற்றும் சொல்நயங்களைக் கண்டுகொள்க. இது முன்னும் பின்னும் ஒக்கும். கரு

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஆறுதலை வைததமுடி நீள்நிலவெ றிப்பளமை
ஆளுடைய பச்சை மயிலோ
டீறுமுத லற்றமது ராபுரியில் உற்றபர
மேசரொரு சற்றும உணரார்
நீறுபடு துட்டமதன வேமுருவெ டுத்தலரின்
நீள்சிலைகு னித்து வழிதேன்
ஊறுகணை தொட்டுவெளி யேசமர்வி ளைப்பதுமென்
ஊழ்வினைப லித்த துவுமே.

(கு - ரை.) அலரின் நீள்சிலை - மலர்வில். இம்மலர்வில்லுடைமையின் காமன் 'புஷ்பதந்வா' என்னும் பெயருடையன். இவ்வில் அவனுக்குரிய மூவகை விற்களுள் ஒன்று. சமர் - போர். விளைப்பதும் பலித்ததும் உணராரென்று முடிக்க. இது தலைவி கூறியது. கக

## தழை

### கட்டளைக்கலித்துறை

பல்லார் உயிர்க்குயி ராமது ரேசரப் பாண்டியன்முன்
கல்லானைக் கிட்ட கரும்பன்று காணின் களபக்கொங்கை
வல்லானைக் கேயிட வாய்த்தது போலுமென் வாட்கணிநய்
வில்லார் புயத்தண்ணல் தண்ணளி யால்தந்த மென்தழையே.

(கு - ரை.) இது தழையேற்பித்தல். தோழி கூறுதலின் 'என் வாட்கண்ணிநய்' என்றாள். கல்லானைக்குக் கரும்பிட்டதைக் கல்லானைக்குக் கரும்பருத்திய படலத்திற் காண்க. இத்தழை அஃதன்றென்றமையின் அதனினுஞ் சிறந்த தென்பது கூறிய வாறு. தழை யென்றது மலர்களை யிடையிலே வைத்துத் தழையிற் செய்யப்பட்டதோர் உடையை. உ0

### வஞ்சித்துறை

தழைத்திடுங் கூடலார்
குழைத்துடன் கூடலார்
பிழைத்திடுங் கூடலே
இழைத்திடுங் கூடலே.

(கு - ரை.) இது, கூடலிழைத்தல்: தழைத்தல் - செழித்தல். கூடலார் மதுரையிலுள்ளார். குழைத்தல் - மகிழச் செய்தல். கூடலார் - கூடுதலைச் செய்யார். இழைத்திடுங்கூடல் கூடல் பிழைத்திடும் - யான் இழைக்கின்ற கூடற்சுழி கூடுதலைத் தவறும். கூடற்சுழியாவது கடற்கரையிலே நின்று இரங்கிய தலைவி பிரிந்த தலைவன் வருவானோ வாரானோ என்று மணலிலே வட்டமாகச் சுழித்திட்ட சுழிகள். எண்ணிப் பார்த்த வழி இரட்டைப்பட்ட சுழிகள் வரின் தலைவர் வருவரென்பதும் ஒற்றைப்பட்ட சுழிவரின் அவர் வாராரென்பதும் தலைவி கருத்து. இதனை 'ஆழி திருத்திச் சுழிக்கணக்கோதி' என்னுந் **திருச்சிற்றம்பலக் கோவையிலுங்** காண்க. வேறு கூறுவாருமுளர். உக

### வஞ்சிவிருத்தம்

கூட லம்பதி கோயில்கொண்
டாடல் கொண்டவ ராடலே
ஊட லும்முடம் பொன்றிலே
கூட லும்மொரு கொம்பரோ.

(கு - ரை.) இஃது இறைவரது அம்மையப்பர் திருவுரு வத்தை (அர்த்த நாரீச வடிவத்தை) வியந்தது. ஆடல் கொண்ட வர் - திருவிளையாடல்களைச் செய்தவர். ஆடல் - திருவிளையாடல். ஒரு பெண் ஊடலும் கூடலும் ஒருடம்பிலே; இஃதும் அப் பிரானுருடைய ஆடலே போலும் என்றவாறு. உஉ

ஊசல்

## கலித்தாழிசை

கொம்மைக் குவடசையக் கூர்விழிவேல் போராடக்
கம்மக் கலனுஞ் சிலம்புங் கலநதார்ப்ப
மும்மைத் தமிழ்மதுரை முக்கணப்பன் சீர்பாடி
அம்மென் மருங்கொசிய ஆடுகபொன் னூசல்
அழகெறிக்கும் பூண்முலையீர் ஆடுகபொன் னூசல்.

(கு - ரை.) கொம்மை - பருமை. குவடு - இங்கே கொங்கை கள். கம்மக்கலன்—கம்மியர் செய்தொழில் முற்றுப்பெற்ற காலணி; 'கம்மப்பல் கல' மென்பது **சிந்தாமணி.** அம் மென் மருங்கு - அழகிய மெல்லிய இடை. உங

களி

## தாழிசை

அழகுற்றதொர் மதுரேசனை அமரேசன் எனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனை யினைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகும் அப்பா
பழுதற்றதொர் சான்றாண்மை பயின்றார்தினை முயன்றாற்
பலமுண்டதின் நலமுண்டவர் அறிவார்பல கலைநூல்
எழுதப்படும் ஏடுண்டது வீடுந்தர வற்றால்
எழுதாததொர் திருமந்திரம் இளம்பாளையுள் உண்டே.

(கு - ரை.) களியாவது கட்குடியர் கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள் கூறும் இலக்கண முடையது. கலம் - ஓரளவு, மட்பாண்டமுமாம். வெளிப்படைப் பொருளாவது குற்ற மற்ற சான்றாண்மை யென்னுந் தொழிலையுடைய சான்றார் நாளும்

ஏறி முயன்றால் பயனாகிய மது உண்டு. அதன் நலத்தை உண்டவர்கள் அறிவார்கள். அதிற் பல நூல்களெழுதுதற்குரிய ஓலையேடு உண்டு. அவ்வோலை வீட்டையுங் கொடுக்கும். எழுதாத மறைமொழியாகிய (மந்திரமாகிய) கள் இளைய பாளையிலேயுண்டு என்பது. உட்பொருளாவது பல நற்பண்புகளாலும் நிறைந்து அவற்றை யாளுந் தன்மை. பயின்றவர்கள் நாளும் வழிபாடு செய்யின் மிகுந்த பயனுண்டு. அந்நலத்தை நுகர்ந்தவர்கள் அறிவார்கள். பல நூல்களும் எழுதப்பட்ட சுவடிகள் உண்டு. வீடும் அளிக்க வல்லது. எழுதாக் கிளவியாகிய மறையுமுண்டு. இங்கே குருமூர்த்தி யென்றது ஆலமர்கடவுளை. இளம்பாளை - முருகக்கடவுள். உச

## கலிவிருத்தம்

உண்பது நஞ்சமால் உறக்கம் இல்லையால்
வண்பதி கூடலே வாய்த்த தென்னுமாற்
பெண்பத மின்னதே பெரும வேள்கணை
எண்பது கோடிமேல் எவன்தொ டுப்பதே.

(கு - ரை.) தலைவன் பிரிந்தமைபற்றி வருந்திய தலைவியின் தன்மையைத் தோழி தலைவனிடங் கூறியது: பதம் - நிலைமை; இத்தலைவியின் நிலை உனது நிலையேயாம், எதனாலெனின், உண்பது நஞ்சம் உறக்கமில்லை வண்பதி கூடலே வாய்த்ததென்னு மதனால். இங்ஙனமாகவும் பெருமானே காமன் பலகோடிக் கணைகளைத் தொடுப்பது என்னை யென்றவாறு. சிவபிரானுக்கு உணவு நஞ்சு, ஒடுக்கமில்லை, வளவிய நகரம் மதுரை; இவளுக்கு உணவு நஞ்சாயிற்று. தூக்கமில்லை, தலைவனைக் கூடியதால் இத் துன்பம் வாய்த்தது என்று சிலேடையாற் பொருள் கொள்க. எண்பது கோடி - மிகுதியை யுணர்த்திற்று. 'எழுபது கோடி யுறும்' 'கோடி தொகுத்தார்' என்னுந் திருக்குறள்களிற் போல. உரு

மடக்கு

## கட்டளைக்கலிப்பா

தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே
சுமந்தி ருந்தது மம்புத ரங்கமே
எடுத்து நின்றது மாயவ ராகமே
எயிறி றுத்தது மாயவ ராகமே

அடுப்ப தந்தணர் பன்னக ராசியே
அணிவ துஞ்சில பன்னக ராசியே
கொடுப்ப தையர் கடம்பவ னத்தையே
கொள்வதையர் கடம்பவ னத்தையே.

(கு - ரை.) அம் புதர் அங்கம் - அழகிய தேவர்களுடைய உடம்பு. அம்புதரங்க மென்பதைத் தரங்க அம்பு என மாற்றுக. அலைகளையுடைய ஆறு (கங்கை) என்பது பொருள். மாயவர் ஆகம் - திருமாலின் உடம்பு. மாய எயிறு இறுத்தது வராகமே - மாயுமாறு மருப்பை ஒடித்தது பன்றியையே. அந்தணர்களாகிய இலக்குடியில் உறைபவர்களுடைய வாழ்த்து என்க; அடுப்பது ஆசி அந்தணர் பல்நகர் என மாற்றிப், பொருந்தியிருப்பது வாழ்த்துக் கூறுதலை யுடைய அந்தணர்களது பல வீடுகளில் என்றலுமாம்; பன்னகர் அந்தணரென்றலும் ஒன்று. பன்னக ராசி - பாம்பின் தொகுதி. ஐயர்கள்தம் பவனம் - தேவருலகம். கொள்வது ஐயர் கடம்ப வனத்தையே - தம்முடையதாகக் கொள்வது மதுரையையே. ௨௯

## நேரிசைவெண்பா

கடங்கரைக்கும் வெற்பிற் கரைகரைக்கும் வைகைத்
தடங்கரைக்கண் நின்றவர்நீர் தாமோ—நெடுந்தகைநும்
கூட்டம் புயமே கொடாவிடில்வேள் கூன்சிலையின்
நாட்டம் புயமே நமன்.

(கு - ரை) இது, பெருமான் யானைமேல்வரக் கண்டு காதல் கொண்டா ளொருத்தி அப்பெருமானை முன்னிலைபடுத்துக் கூறியது: கடம் - மதநீர். கரைகரும் - சொரியும், முழங்கும் என்றுமாம். வெற்பு - இங்கே யானை. யானையின்மேல் நின்றவர் என்க; யானை போல நின்றவ ரென்பதுமாம். நெடுந்தகை நும்புயம் கூட்டம் கொடாவிடி லென்க. நாட்டு அம்புயம் என்றது மன்மதன் பூட்டு கின்ற தாமரை மலராகிய கணையை. காமனது ஐந்து அம்புகளில் தாமரை நினைப்பையும், மா பசலையையும், அசோகு உணவு தெவிட்டலையும், முல்லை விருப்பத்தையும், நீலம் கொல்லுதலையும் உண்டாக்குவன. இவற்றுள் நினைப்பை யுண்டாக்குந் தாமரையே எனக்கு நமனாயின் ஏனைய அம்புகள் என்ன செய்யா என்றவாறு.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நம்பானி னக்கோல முறையோவெ னக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவர் என்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர் கூடல் தடங்காவில் வண்டீர்
செம்பாதி மெய்யும கரும்பாதி யாகத்
திருத்தோளும் மார்பும் வடுப்பட்ட துங்கண்
டெம்பாவை யைப்பின்னும் அம்பாவை செய்வார்
எளியாரை நலிகிற்பின் ஏதாம் இவர்க்கே.

(து - ரை.) **தலைமகள் வருத்தம் நோக்கிச் சேவிலி வண்டு களிடம் கூறியது.** நம்பன் - விரும்பப்படுபவன். கால நஞ்சு - காலன்போன்ற நஞ்சு, காளகூட நஞ்சமுமாம். பித்துண்டு நாம் தேவரென்பார் - மயக்கங்கொண்டு நாம கடவுளென்று கூறும் பிற தேவர்கள். நஞ்சுண்டு காதோலை பாலித்த தயவாளர் என்க. காதோலை பாலித்தலாவது கட்டுக்கழுத்தி (சுமங்கலை) யாயிருக்கச் செய்தல்; கணவனை யிழந்தார் காதணி களைதல் வேண்டு மென்பது விதியாதலின். வண்டீர் - வண்டுகளே. ஒருத்தியை மணந்ததனால் தமது திருவுருவிற் பாதி கருமேனியாகியும் தோளும் மார்பும் வடுப்பட்டுமிருப்ப, எம்முடைய கண்மணி போன்ற பெண்ணை மயலாக்கி ஓவியம்போ லசைவற்றிருக்கச் செய்தல் தகாதென்பதாம். முன்னொருத்தியால் இத்துணை விளைந்தது; இன்னும் யாது விளையுமோ என்பதும் குறிப்பித்தவாறு. எளியார் - வலிவில்லாதவர்கள். உ௮

### கோச்சகக்கலிப்பா

ஆவமே நாணே அடுகணையே அம்மதவேள்
சாவமே தூக்கிற் சமனும் சமனன்றே
ஓவமே அன்னாள் உயிர்விற்றுப் பெண்பழிகொள்
பாவமே பாவம் பழியஞ்சும் சொக்கருக்கே.

(து - ரை.) **இது, சேவிலிகூற்று; பாங்கி கூற்றுமாம்:** ஆவம் - அம்பறாத்தூணி; இங்கே பூங்கொத்தாகிய அம்பறாத்தூணி. சாவம் - வில். தூக்கில் - ஆராய்ந்தால். மேற்கூறிய நான்கனுள்

ஒன்றுக்கேனும் நமன் ஒப்பாகான்; இங்ஙனமாகவும் அவன் அவ்வினைத்துந் தாங்கிவரின் இவள் நிலைமை என்னை மென்றவாறு. ஓவம் - ஓவியம். உயிர் விற்றலாவது - காமனது அம்பினால் இவள் இறத்தற்குத் தான் ஏதுவாதல். பாவமே பாவம் - பாவமோ கருத்து. பழியஞ்சிய செய்தியைப் **பழியஞ்சிய படலத்திற்** காண்க. உக

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்**

கரைபொரு திரங்கு கழிதொறு மிருந்து
 கயல்வர வுறங்கு புள்ளீரே
பருவமும் இழந்தென் மகளயர் உழந்து
 படவிர கமொன்றும் உள்ளீரே
அருமையொ டெங்கள் பெருமையை யறிந்தும்
 அருள்புரிய இங்கு வல்லீரே
மருவிய கடம்ப வனமது புகுந்தெம்
 மதுரைய ரன்முன்பு சொல்லீரே.

(கு - ரை.) இது, **செவிலித்தாய் நீர்ப்பறவைகளைத் தூது விடுத்தது:** பொருது - மோதி. இரங்குதல் - ஒலித்தல். கழி - உப்பங்கழி. கயல்வர - கயல் வருமளவும். பருவமாவது இன்பம் நுகரத்தக்க மங்கைப்பருவம். வல்லீரே - நீங்கள் வன்மையுடையீரா? மாட்டீரே யென்றுமாம். ௩0

**கோச்சகக்கலிப்பா**

ஈரித்த தென்றல் இளவாடை திங்களென்றோர்
பேரிட்ட மும்மைப பிணியோ தணியாவால்
பாருக்குள் நீரே பழியஞ்சி யாரெனின்மற்
றாருக் குரைக்கேம் அடிகேள் அடிகேளோ.

(கு - ரை) இது, **தலைவி கூற்று; பாங்கி கூற்றுமாம்:** ஈரித்த தென்றல் - குளிர்ந்த தென்றல். மும்மைப்பிணி - மூன்று நோய். பழியஞ்சியார் : முன்னிலைப் படர்க்கை. ௩௧

பிச்சியார்

**கட்டளைக்கலிப்பா**

அடுத்த தோர்தவ வேடமும் புண்டரம்
அணிந்த முண்டமு மாய்வெள்ளி யம்பலத்
தெடுத்த தாள்பதித் தாடிக் கடைப்பிச்சைக்
கிச்சை பேசுமப் பிச்சனெ னச்செல்வீர்
கடைக்கண் நோக்கமும் புன்மூர லும்முயிர்
கவர்ந்து கொள்ள விடுத்த கபாலிபோற்
பிடித்த சூலமுங் கைவிட்டி லீரென்றே
பிச்சி யாரெனும் பேருமக் கிட்டதே.

(து - ரை.) பிச்சியார் - சிவபெருமானுடைய திருக்குறிகளை யணிந்து பிச்சைக்குத் தெருவிலே வருகிற மகளிர். அவரை நோக்கிக் காமுகனொருவன் தன் வேட்கையை வெளிப்படுத்திக் கூறு மிலக்கணமுடையது. கடை - வீட்டு வாயில். பிச்சன் என - சிவபெருமான் போல. உங்கட்குப் பிச்சியாரென்னும் பேர் நீங்கள் சிவபிரானைப் போலத் தவவுருவும் நீற்றுக்குறி யணிந்த முண்டமு மாய்த் தாள்பதித்தாடிப் பிசசைக்குச் செல்கின்றீர், உங்களுடைய நோக்கமும் மூரலும் உயிரைக் கொள்ளை கொள்ளுதற்குத் தோன்றினவாகின்றன ; கையில் மண்டையோடுஞ் சூலமுங் கொள்கின்றீரென்னு மிவவேதுக்களால் வந்ததுபோலு மென்க. சிவபெருமானுடைய நோக்கம் காமனுயிரையும் மூரல் முந்நகரின் அசுரருயிரையும் கொள்ளை கொண்டன. கபாலி - சிவபிரான். ௩௨

**கட்டளைக்கலித்துறை**

இடங்கொண்ட மானும் வலங்கொண்ட
ஒண்மழு வும்மெழுதும்
படங்கொண்டு வந்தனை யானெஞ்ச
மேயினிப் பங்கயப்பூந்
தடங்கொண்ட கூடற் சவுந்தர
மாறர்பொற் றாள்பெயர்த்து
நடங்கொண்ட தோர்வெள்ளி மன்றே
றுதுமின்று நாளையிலே.

(கு - ரை.) இது, **தலைவி மன்றேறத் துணிதல்**: தலைவன் தலைவியாகிய இருவரும் களவிற் புணர்ந்து நீங்கியவழிப் பிரிவாற்றாமை மிகுந்த தலைவன் தன் பெருமை முதலியன அழிந்து தலைவியினுருவத்தையும் தன் பெயரையும் ஒரு படத்தி லெழுதிக் கொண்டு பனைமடலாற் செய்யப்பட்ட ஒரு குதிரையிலேறிப் பிறரால் இழுப்பித்துத் தெருத் தெருவாகப் பலரும் கூடும் பொது விடங்களிற் செல்லுதல், தலைவன் மடலூர்ந்து மன்றேறுதலாம்; தலைவிக்கு அவ்வாறு பிரிவாற்றாமை மிகுந்தவழி மடலூர்தல் ஒழிந்த ஏனைய நிகழுமென்க. தாள் பெயர்த்தல் - கான்மாறியாடுதல். இன்று நாளையில் - இந்நாளையில், இந்நாளில்; இன்று அல்லது நாளை யென்றுமாம். ௩௩

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்**

இருநிலன் அகழ்ந்ததொரு களிறுவெளி றும்படியோர்
இருளியின் அணைந்த அணையுமக்
குருளையை மணந்தருளின் இளமுலை சுரந்துதவு
குழகரி துணர்ந்திலர் கொலாம்
கருகியது கங்குலற வெளிறியது கொங்கைசில
கணைமதன் வழங்க அவைபோய்
உருவிய பசும்புணில்வெண் ணிலவனல் கொளுந்தியதெம்
முயிர்சிறி திருந்த தரிதே.

(கு - ரை.) இது, **தலைவனைப் பிரிந்த தலைவிகூற்று**: களிறு - ஆண்பன்றி. 'வேழக்குரித்தே விதந்துகளிறெனல், கேழற் கண்ணுங் கடிவரை யின்றே' என்பது **தொல்காப்பியம்**. இருளி - பன்றி. இருளியின் - பன்றி வடிவத்தின். அணையும் அக் குருளை - தம்மை யணைந்த பன்றிக்குட்டிகள். மணத்தல் - சேர்தல். அருளின் - அருளால். குழகர் - அழகர். இச்செய்தியைப் **பன்றிக் குட்டிகளுக்கு முலைகொடுத்த படலத்திற்** கண்டுகொள்க. இது உணர்ந்திலர் என்பதில் இது தொகுதியை யுணர்த்தியது. கங்குல் கருகியதும் கொங்கை பசலையால் வெளிறியதும் மதன் சில கணை வழங்க அவைபோய் உருவிய புண்ணில் நிலவு அனல் கொளுத்தியதும் எமதுயிர் அரிதாகச் சிறிதிருந்ததும் குழகர் உணர்ந்திலர் கொலாம் என்க. பசும்புண் - புதியபுண். ௩௪

### கொற்றியார்

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அருநாமம் அரசிவசங் கரநாமம் எனக்கொண்
டவற்றொருநா மம்பகர்ந்தோர்க் கரியயனிந் திரனும்
பெருநாமங் கொடுத்தவர்தங் கருநாமந் துடைக்கும்
பெற்றியார் தமிழ்மதுரைக் கொற்றியார் கேளீர்
ஒருநாமம் பயந்தவர்முன் தருநாமம் வியந்திங்
குலகரிடு நாமமுமொன் றுள்ளநீர் வெள்ளைத
திருநாமம இட்டவன்றே கெட்டவன்றே இமையோர்
தெரித்திடுநா மமுமுனிவோர் தரித்திடுநா மமுமே.

(கு - ரை.) கொற்றியார் என்பது திருமாலின் திருக்குறிக ளணிந்து பிச்சைக்குத் தெருவிலே வருகிற மகளிரை நோக்கிக் காமுகனொருவன் தன் வேட்கையை வெளிப்படுத்திக் கூறு மிலக் கணமுடையது. அருமையான பெயர்கள் எவையெனின் அர சிவசங்கர என்னும் பெயர்களென்க. பெருநாமம்-பெரிய பட்டம். அவர்தம் கருநாமம் - அவர்களுடைய பிறப்பின் பெயர். நாமம் - அச்சமுமாம். பெற்றியார் - சோமசுந்தரக் கடவுள். ஒரு நாமம் என்றது பெண் என்று கூறும் ஒரு பெயர் என்க. வியந்திங் குலகரிடும் பெயர் - பூங்குழல், துடியிடை முதலியனவாக வரும் பெயர்கள். வெள்ளைத் திருநாமம் - வெள்ளைமண்ணு லிடப்படும் நாமம். இமையோர் தரித்திடு நாமமு முனிவோர் தரித்திடு நாமமுங் கெட்டன என்க. சயம் செயமென வருதல்போலத் தரித்திடு மென்பது தெரித்திடுமென்று வநதது. நாமம் - புகழ். இளையோர் தெரித்திடு நாமமென்பதும் பாடம். ௩௫

### நேரிசை வெண்பா

மும்மைத் தமிழ்க்கூடல் மூலலிங்கத் தங்கயற்கண்
அம்மைக் கமுதாம் அருமருந்தை—வெம்மைவினைக்
கள்ளத் திருக்கோயிற் காணலாங் கண்டீர்நம்
உள்ளத் திருக்கோயி லுள்.

(கு - ரை.) வினைக் கள்ளத்திருக்கு ஓயில் - வினைக்கு ஏது வான வஞ்சனையாகிய மாறுபாடு ஒழிந்தால். ௩௬

### கட்டளைக்கலித்துறை

உள்ளும் புறம்புங் கசிந்தூற் றெழுநெக் குடைந்துகுதி
கொள்ளுஞ்செந் தேறல் குனிக்கின்ற வாபத்திக் கொத்தரும்ப
விள்ளுங் கமலத்து மவேத சிரத்தும்விண் மீனைமுகந்
தள்ளுங் கொடிமதிற் பொற்கூடல் வெள்ளி யரங்கததுமே

(கு - ரை.) உள் - நெஞ்சம். புறம்பு - உடம்பு. நெக்குடைந்து ஊற்றெழ என்க. குதிகொள்ளுதல் - பெருகுதல். தேறல் - தேனாகிய சிவபெருமான். குனிக்கின்றவாறு என்ன வியப்பு என்க. பத்திக்கொத்து அரும்ப விள்ளுங் கமலம் - அன்பர்களது உள்ளத் தாமரை. ௩௭

மடக்கு

### கட்டளைக்கலிப்பா

அரங்கு மையற்கு வெள்ளிய ரங்கமே
ஆல யம்பிற வெள்ளிய ரங்கமே
உரங்கொள் பல்கல னென்பர வாமையே
உணர்வு றுமையு மென்பர வாமையே
விரும்பு பாடலு மாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானந் தடமதிற் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே.

(கு - ரை.) வெள்ளி அரங்கம் - வெள்ளியம்பலம். பிற எள்ளியார் அங்கம் - ஏனைய பொருள்களை வெறுத்தோருடைய நெஞ்சம். என்பு அரவு ஆமை - எலும்பு, பாம்பு, ஆமையோடு. இவை மார்பிலணிந்த பல அணிகலங்களென்க. உணர்வு உறுமையும் என் பரவாமையே - அப் பெருமான் அறியாதிருப்பதும் (பொருளாகக் கொள்ளாதிருப்பதும்) என் வழிபாடின்மையேயா மென்க. இதனை 'வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பெருமையினாற் பொறுப்பவனே' என்ற திருவாசகத்தாலறிக. நான் நல்லுணர்வு பெறுதிருத்தலும் எனது வழிபாடின்மையா லாமென்று பொருள் கூறுவாருமுளர்: அரங்கு முதலிய எல்லாம் பெருமானுடையன வாகவும் இதனைமட்டும் வேறு கூறுதல் பொருந்தாதென்க. மா கவி மானம் - மான மா கவி யென்று மாற்றிப் பெருமையை

யுடைய சிறந்த செய்யுட்களென்று பொருள் கொள்க. **கவி** யென்றது திருஞான சம்பந்த நாயனார் முதலிய பெரியாருடைய அருண் மொழிகளை. மானம் - விமானம். மாக விமானம் - விண்ணிழி விமானம். தடமதில் - பெரிய மதில். வெள்ளிதடம் - வெள்ளி மலை. வெள்ளிமலையிற் சேர்தல் செயற்கை யென்க. ௩அ

## விருத்தக்கலித்துறை

கூடார் புரந்தீ மடுக்கின்ற தானுசென்று கும்பிட்டதோர்
ஏடார் குழற்கோதை உயிருண்ப துமமையா இளமூரலே
வாடாத செங்கோல் வளாப்பீர் எனக்கன்னி வளநாடெனும
நாடாள வைத்தாளும் நகையா தினிபபோடு நகையாடவே.

(து - ரை.) இது, **தலைவனை நோக்கிச் சேவிலி கூறியது; பாங்கி கூறியதுமாம்:** கூடார் - பகைவர். புரம் - முப்புரம்; உடம்புமாம். இளமூரல் - புன் சிரிப்பு. பகைமை பூண்ட அசுரரை யும் அன்பு பூண்ட பெண்ணையும் ஒரு தன்மையாக மூரலால் உயிருண்டல் தகாதென்றவாறு. நாடாளவைத்தாள் - தடாதகைப் பிராட்டியார். நகையாது - எளனஞ்செய்யாதபடி. இனிப்போடு நகையாட - இனிதாகும்படி நகையாடுக. ஆட: அகரவீற்று வியங்கோள். இனிப்போது நகையாடலே என்பது பாடமாயின் கன்னி நாடென நாட்டை யாளுவதற்கு நீர் கொண்ட நகை யாது? நீர் நகையாடல் அமையுமென்று பொருள் கொள்க. ௩௯

## கோச்சகக்கலிப்பா

நகையே அமையுமிந்த நாகரிக நோக்கு
மிகையே அனங்கன வினைகொளல்வீ ணன்றே
தகையே மதுரேசன் தண்டமிழ்நா டன்னீர்
பகையே துமக்கும நமக்கும் பகாவீரே.

(து - ரை.) **தலைவன் தலைவியை நோக்கிக் கூறியது; தலைவி கூற்றுமாம்:** நகை - புன்சிரிப்பு. என்னை வருத்துதற்கு உம் முடைய புன்சிரிப்பொன்றே போதுமானது; இந்த நாகரிகமான பார்வை மிகையேயாம்; அதன் மேலும் காமன் தன் தொழிலைத் தொடங்குதல் வீணாகும் என்றவாறு. தகையே - என்னை வருத்துதல் தகுதியோ. ௪0

## கலிவிருத்தம்

வீரம் வைத்தவில் வேல்கணை மெய்த்தன
பாரம் வைத்த பசும்புண் பசும்புணே
ஈரம் வைத்த இளமதி வெண்ணிலாக்
காரம் வைத்த கடம்பவ னேசனே.

(கு - ரை.) இது, தலைவி கூறியது: வில்வேள் - வில்லையுடைய காமன். கணை வைத்த பசும்புண் - கணையைச் செலுத்தியதால் உண்டாகிய பசும்புண். அப்புண் புண்ணாகவேயிருக்கின்றது, வெண்ணிலாக்காரம் வைத்தும் ஆறவில்லை; உலகத்துப் புண்ணிற் காரம் வைத்த வழி அஃதாறுதல் இயல்பு; இஃதாறாமல் மிகுவ தென்னே யென்றவாறு. ௪௧

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கடங்கால் பொருப்பொன் றிடும்போர் வைசுற் றுங்
கடம்பா டவிச்சுந் தரரேறும்
தடந்தோள் குறித்திங் கணைந்தே மெனிற்பின்
தரும்பே றுன்மத்தின் பெருவாழ்வோ
தொடர்ந்தே உடற்றிந் திரன்சா பமுற்றுந்
துரந்தா லுமிப்பெண் பழிபோமோ
அடைந்தேம் விடக்கொன் றையந்தார் எவர்க்கென்
றமைந்தே கிடக்கின் றதுதானே.

(கு - ரை.) இது, தலைவனை நோக்கித் தலைவி கூறியது: கடம் கால் பொருப்பு - மதநீரைச் சொரிகின்ற மலையாகிய யானை. கடம்பாடவி - கடம்பவனம்; அது மதுரை. உன்மத்தின் பெரு வாழ்வோ - பைத்தியமாகிய பெரிய வாழ்வோ. உடற்றுதல் - வருத்துதல். பெண்பழியாவது கொன்றையந்தார் தாராமல் சாதல் போன்ற காமத்துன்பத்தை விளைத்தலாலுண்டாம் பழி. அடைந்தேம்விட - உம்மை விரும்பி யடைந்த எங்களுக்கல்லாமல். 'பிரமகத்தி'யினும் இது கொடியதென்பாள் 'இந்திரன் சாபமுற் றுந் துரந்தாலுமிப் பெண்பழி போமோ' என்றாள். ௪௨

ஊர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தான வெங்களி றேடும் இந்திரன் சாபமுந் தொலையா
மேனி தந்தகல் யாண சுந்தரர் மேவு வண்பதியாம்
வானி மிர்ந்திட ஆடும ஒண்கொடி வால சந்திரனும்
கூனி மிர்ந்திட வேதி மிர்ந்திடு கூட லம்பதியே.

(கு - ரை.) தானம - மதநீர். வெள்ளை யானையும் இந்திரனும் அடைந்த சாபம் நீக்கி வெண்ணிறமும் சிறந்த உருவமும் அளித்த கல்யாண சுந்தரரென்க. வான் இமிர்ந்திட - மேகங்கள் (அச்சத் தால்) முழங்க; வான் நிமிர்ந்திட எனப் பிரித்து மேலுலகத்தை நெருங்க என்றலுமாம். நிமிர்ந்திடு கூடல் - உயர்ந்த மதுரை. இது நூல்களுக்குரிய ஊரென்னுந் துறை. ௩௩

கைக்கிளை

மருட்பா

அஞ்சேல் மடநெஞ் சபிடேகச் சொக்கருட்
செஞ்சே வடிக்கடிமை செய்யார்போல்—துஞ்சா
தெறிதிரைக் கருங்கட லேய்க்கும்
அறலியற் கூந்தற் காடமர்க் கண்ணே.

(கு - ரை.) இஃது, உட்கோளெனும் துறை: அஞ்சேல் - அஞ்சாதே. நெஞ்சு - விளி. அருட் சேவடி யென்க. செஞ் சேவடி-மிகச் சிவந்த அடி; அழகிய சிவந்த அடியுமாம். துஞ்சுதல் - ஓய்தல். அறல் - கருமணல். ஆடு அமர்க்கண் - அசைகின்ற கண்; போர் செய்தலையுடைய கண். கண் கருங்கடலை யொக்கு மென்க. கண்கள் பொது நோக்கும் காதல் நோக்குமாகிய இரண்டு முடைய தால் நஞ்சும் அமுதமுமுடைய கடலை யொக்கு மென்றவாறு. தனியே பொழிலிலே தலைவியைக் கண்ட தலைவன் இவள் மக்கட் பெண்ணோ தெய்வப்பெண்ணோ என ஐயுற்றான் அவளது கண்ணி னிமைப்பு நோக்கி மக்கட்பெண்ணென்றே தெளிந்தானெனக் கொண்டு தெளிதலென்னுந்துறை யென்றலுமாம். ஒருவர் கருத்து ஒருவர் அறியாத ஒருதலைக் காமமாதலின் இது கைக் கிளையாயிற்று. ௩௪

### கட்டளைக்கலித்துறை

**கண்முத் தரும்பின கொங்கைபொன் பூத்த கனிபவளத்
தொண்முத் தரும்புமென் பெண்முத்துக் கேமுத்தம் உண்டிமயத்
தண்முத் தமைந்த தபனிய மேதலைச் சங்கம்பொங்கும்
பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்தர பாண்டியனே.**

(கு - ரை.) முத்தும் பொன்னும் முறையே கண்ணீரையும் பசலையையும் உணர்த்தின. கனி பவளத்து ஒண் முத்து அரும்பும் என் பெண் முத்துக்கே முத்தம் உண்டு - கனிந்தபவளம் போன்ற வாயில் ஒள்ளிய முத்துப் போன்ற பற்கள் தோன்றிய என் சிறந்த பெண்ணுக்கோ பிரிவு உளதாயது. முத்தம் - பிரிவு. தலைவன் பிரிவால் தலைவி கண்ணீர் வார்த்தும் கொங்கைப்பசலை பூத்தும் வருந்துதல் கண்ட செவிலி கூறியது இச் செய்யுள். இமையத் தண் முத்து—உமையம்மையார். தமனியம் - பொன். விரைந்து வந்தணைதல் வேண்டுமென்பது கருத்து. ௬௫

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பாணறு மழலைச் சிறியாழ் மதுரப்
பாடற்குத் தோடுவார் காதும்
பனிமதிக் கொழுந்துக் கவிர்சடைப் பொதும்பும்
பாலித்தாய் பாட்டளி குழைக்கும்

கோணறு உளைப்பூங் கொத்தலர் குடுமிக்
குறுங்கணெட் டிலைச்சிலை குனித்த
கூற்றுயிர் குடித்தாய்க் காற்றலாம் அலதென்
கொடியிடைக் காற்றுமா றுளதோ

சேணறுப் பசும்பொன் தசும்பசும் பிருக்குஞ்
சிகரியில் தகரநா றைம்பாற்
சேயரிக் கருங்கட் பசுங்கொடி நுடங்கும்
செவ்வியிற் சிறைமயி லகவத்

தூணறு முழவுத் தோள்மடித் தும்பர்
சுவல்பிடித் தணைந்துபார்த் துணங்கும்
தோரண மாடக் கூடலிற் சோம
சுந்தரா சந்த்ரசே கரனே.

(த-ரை.) இது, செவிலிகூற்று: சீறியாழ்-சிறியயாழ். அசுவதரன் கம்பளன் என்னுங் கந்தருவரிருவர் சிவபெருமானது திருக்காதில் தோட்டு வடிவமாயிருந்து இசைப்பணிவிடை செய்கின்றாரென்க. பொதும்பு-பொந்து. கூற்று-இங்கே நமன் போன்ற காமனைக் குறித்து நின்றது. அளி குழைக்கும் சிலை-வண்டுகளாகிய நாண் பூட்டப்பட்ட வில். கோணுதல் நீங்காத (எப்பொழுதும் வளைந்த) மேலே துய்யையுடைய பூங்கொத்து மலர்ந்த நுனியையும் குறிய கணுக்களையும் நெடிய இலைகளையுமுடைய சிலை யென்க. காமனுயிரைக் குடித்தவுமக்கு யாழ்ப்பாடலையும் மதிக்கொழுந்தினையும் ஆற்றி யிருத்தலாமல்லது என் மகட்காற்றியிருத்த லாகாது என்று செவிலி கூறியது இச்செய்யுள். சேண் - உயர்ச்சி. தசும்பு-கலசம். அசும்பிருத்தல் - நெகிழ்ந்திருத்தல். சிகரி - மலைபோன்ற மாடம். தகரம் - மயிர்ச்சாந்து. பசுங்கொடி - பெண்கள். தூண் அரு முழவுத்தோள் - தூண், வலிமைக்கும் முழவு, வடிவுக்கும் தோள்கட்கு உவமை யாயின. உம்பர் - தேவர். சுவல் - பிடரி. மாடங்கள் தேவருலகத்தினும் மேற்சென்று உயர்ந்து தோன்றுதலின் தேவர்கள் மாடங்களின்மீது மயில் அகவுதலைத் தோள் மடித்துச சுவல் பிடித்து அண்ணாந்து பார்க்கின்றாரென்க. அணந்து - அண்ணாந்து. உணங்குதல் - வாடுதல். தோரணம் - மாடத்தின் வாயில். என் மகளாற்றாளாதலின் விரைந்து வந்தணைதல் வேண்டு மென்பது கருத்து. ௨௬

## நேரிசையாசிரியப்பா

கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ் விரிக்கும் பொற்பொகுட் டம்புயம்
பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டும்
கடவுள்செங் கைக்குப் படியெடுப் பேய்க்கும்
தடமலர்ப் பொய்கைத் தண்டமிழ்க் கூடல்
ஒண்ணுதல் தழீஇய கண்ணுதற் கடவுள்
எண்மர் புறந்தரூஉம் ஒண்பெருந் திசைக்குத்
தூய்மைசெய் தாங்குப் பானிலா விரிந்த
இரசதங் குயின்ற திருமா மன்றகம்
பொன்மலை கிடப்ப வெள்ளிவெற் புகந்தாய்க்குச்
செம்பொன் மன்றினுஞ் சிறந்தன் றாயினும்
கருந்ாது குயின்றவென் கன்னெஞ் சகத்தும்
வருந்தியும் வழங்கல் வேண்டும்
இருவே றமைந்தநின் ஒருபெருங் கூத்தே.

(கு - ரை.) பொறி - புள்ளி. சுரும்பர் - வண்டு. செவ்வழி : ஒரு பண். தாமரை கைக்கும் இதழ்கள் பலகைக்கும் உவமையாயின. பாணற்குப் பலகையிட்டமை **பலகையிட்ட படலத்திற்** காண்க. படி - பிரதி. அஃதாவது ஒன்றன் வடிவுடைத்தாய் அதுவென்றே கருதப்படுவது. ஒள்நுதல் - மீனாட்சியம்மையார். எண்மர் - இந்திரன் முதலிய திசைகாப்பாளர். திகை - திசை. இரசதம் குயின்ற திருமாமன்றகம் - வெள்ளியாற் செய்யப்பட்ட அழகிய பெரிய அவை. உகத்தல் - விரும்புதல். சிறந்தன்று - சிறந்தது. பொன்மலை யிருப்பவும் அதனினும் சிறந்ததாக வெள்ளி மலையை விரும்பினார்க்குப் பொன்மன்றினும் இரசதமன்று சிறந்ததாயிற் றென்றவாறு. கருந்தாது - இரும்பு. வருந்தியும் - வருந்தியேனும். கூத்து வழங்கல் வேண்டுமெனமுடிக்க. இருவேறமைதலாவது ஆண்பெண் என்னுமிரண்டு வேறு வடிவமும் ஒருங்கமைந்திருத்தல். ஒண்பேருடுகை யென்பதும் பாடம். ௪௭

### நேரிசைவெண்பா

தேத்தந்த கொன்றையான் தெய்வத் தமிழ்க்கூடல்
மாத்தந்த வேழ மதமடங்க—மீத்தந்த
மாகவி மானம் வணங்கினமாற் கூற்றெமைவிட்
டேகவி மானமுனக் கேன்.

(கு - ரை.) தேன் தந்த கொன்றையான் - தேனைச் சொரிகின்ற கொன்றை மாலையை யுடைய சிவபெருமான். மா தந்த வேழம் - பெரிய மருப்புக்களையுடைய யானை. மீதந்த - மேலே கொண்டு தாங்குகின்ற. மாக விமானம் - விண்ணிழி வானவூர்தி. கூற்று : விளி. எமைவிட்டு ஏகு அவிமானம் உனககு என்-எமமைவிட்டு நீங்கும் உனக்குச செருக்கு என்? அவிமானம்—அபிமானம். ௪௮

### கட்டளைக்கலித்துறை

ஏனின் றிரங்குதி யேழைநெஞ் சேவண் டிமிர்கடப்பங்
கானின் றதுமற்றோர் கற்பக மேயந்தக் கற்பகத்தின்
பானின்ற பச்சைப் பசுங்கொடி யேமுற்றும் பாலிக்குமால்
தேனின்ற ஐந்தருச் சிந்தா மணியொடத் தேனுவுமே.

(கு - ரை.) இது,**நெஞ்சிற்கு அறிவுறுத்துதல்** : கடப்பங்கான் கடம்பவனமாகியமதுரை. சிவபெருமான் அன்பர் வேண்டின

வெல்லாம் அருளுதலின் 'கற்பகம்' என்றார். கொடி - மீனாட்சியம்மையார். அப் பசுங் கொடியே ஐந்தரு சிந்தாமணி தேனு வாகிய இவற்றைப் பாலிக்கு மென்க. ஐந்தரு - அரிசந்தானம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தார மென்பன. சகூ

### தாழிசை

**தேனுறாத சிலைக்கரும்பு கொலைக்கரும்பொரு வேம்பெனும்**
தேம்புயத்தணி வேம்பினைக்கனி நீங்கரும்பெனும் இவவணம்
**மானுறாத மழைக்கணங்கையும் மாறியாடத் தொடங்குமால்**
மாறியாடுநின் வல்லபந்தொழ வநதபேர்க்கும் வருங்கொலோ
**கானுறாத சுருப்புநாண்கொள் கருப்புவில்லியைக் காய்ந்தநாட்**
கைப்பதாகை கவர்ந்து கொண்டதொர் காட்சியென்ன எடுப் [தோர்
**மீனுறாத அடற்பதாகை விடைப்பதாகை உடன்கொளும்**
**வீரசுந்தர மாறமாறடும் வெள்ளியம்பல வாணனே.**

(து - ரை.) இது, **சேவிலி கூறுதல்; பாங்கி கூறுதலுமாம்:** சிலைக்கரும்பு - காமனது வில்லாகிய கரும்பு; கொலைகசு அரும்பு ஒரு வேம்பு - கொல்லுதற்கே தோன்றின ஒரு வேம்பு; இவவாறன்றிச் சிலைக்கு அரும்பு கொலைக கரும்பு ஒரு வேம்பு எனப் பிரித்து வில்லாதற்குப் பொருந்திய கொல்லையில் தோன்றும கரும்பு ஒரு வேம்பு என்றலுமாம்; இப்பொருள்கோட்குக் கொலை இடைக்குறை. தேம் புயம் - அழகிய தோள். மான் பார்வையின் தன்மை நீங்காத கண் என்க. மாறியாடுதல் இரண்டனுள் முன்னது மாறுக உரையாடுதல் எனவும், பின்னது கால்மாறி யாடுதல் எனவும் பொருள்படும். வல்லபம் வருங்கொலோ என்க. கான் - மணம். பதாகை - கொடி. மாறு - பகை; இங்கே பகைவர். ௩௦

### பதினைந்துசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வாணிலாப் பரப்பு மகுடகோ டீர
மறிபுனற் கங்கைகங் கைக்கும்
வையமீன் றளித்த மரகதக் கொடிக்குன்
வாமபா கமும்வழங் கினையாற்

பூணுலாங் களபப் புணர்முலை யிவட்குன்
பொற்புயம் வழங்கலை யெமர்போற்
பொதுவினின் றாய்க்கு நடுவின்மை யிடையே
புகுந்தவா றென்கொலோ புகலாய்

தூணுலாம் பசும்பொன் தோரண முகப்பிற்
சூளிகை நெற்றிநின் றிறங்குஞ்
சுரிமுகக் குடக்கூன் வலம்புரிச் சங்கந்
தோன்றலும் மூன்றுநாள் நிரம்பா

நீணிலா வெனக்கொண் டணங்கனார் வளைக்கை
நெட்டிதழ்க் கமலங்கள் முகிழ்க்கும்
நீடுநான் மாடக் கூடலிற் பொலியும்
நிமலனே மதுரைநா யகனே.

(கு - ரை.) இது, **செவிலித்தாய் கூற்று**: ஒரு பெண்ணுக்குச் சடையையும் மற்றொரு பெண்ணுக்கு இடப்பாகத்தையும் கொடுத்த நீ, என் பெண்ணுக்கு மட்டும் புயத்தை வழங்காதிருத்தல் பொதுவினின்ற உனக்குத் தகாதெனச் செவிலித்தாய் கூறுகின்றாள். கோடீரம் - சடை. மறிபுனல் - அலைமடங்குகின்ற நீர். எமர்போ லென்பது எமக்குச் சுற்றத்தார்போல என்றும் எம்மவராகிய பெண்கள்போல என்றும் பொருள்படும். தோரணம் - கோபுரவாயில். சூளிகை - மேன்மாடம். மூன்றுநாள் நிரம்பா நீணிலா - மூன்றாம்பிறைத் திங்கள். கன்னியர் தமக்கு விரைவில் நல்ல கணவன் கிடைத்தல் வேண்டுமென்று பிறையைத் தொழுதல் பண்டைவழக்கு. கைக் கமலங்கள் முகிழ்த்தலாவது கைகுவித்து வணங்குதல். திங்கள் தோன்றியவழிக் கமலங்கள் குவிதல் இயல்பாமென்று கூறும் சொன்னயமும் காண்க. மேலும் இவ்வாறே வரும் சொன்னயம் அறிக. ௧௧

**கட்டளைக்கலிப்பா**

மதும லர்க்குழ லாய்பிச்சை யென்றுநம்
மனைதொ றுந்திரி வார்பிச்சை யிட்டபோ
ததிலொர் பிச்சையுங் கொள்ளார்கொள் கின்றதிங்
கறிவு நாணுநம் ஆவியு மேகொலாம்

பதும நாறும் பலிக்கலத் தூற்றிய
பச்சி ரத்தம் பழஞ்சோ றெனிற்பினைப்
புதிய துங்கம் உயிர்ப்பலி யேயன்றோ
பூவை பால்கொள் புழுகுநெய்ச் சொக்கர்க்கே.

(கு - ரை.) இச் செய்யுள், **பிச்சை** (பிக்ஷாடன)**க் கோலங் கண்டு காமுற்றாள் கூறியது**: குழலாய் - காமுற்றாள் தோழியை விளித்தல்; பிச்சைத்தேவர் காமுற்றாளை விளித்ததுமாம். அதில் - பலவகைப் பிச்சையில். பதும நாறும் பலிக்கலம் - நான்முக னுடைய மண்டையோடு. பச்சிரத்தம் - திருமாலின் குருதி. பலி - பிச்சை. பூவை - நாகணவாய்ப் பறவை, இக்காலத்தார் 'மைனா' என்பர்; இங்கே உமையம்மையாரைக் குறித்தது. ௫௨

## கிள்ளைவிடு தூது

### கட்டளைக்கலித்துறை

புழுகுநெய்ச் சொக்கர் அபிடேகச் சொக்கர்காப் பூரச்சொக்கர்
அழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்கர் அங்கயற்கண்
தழுவிய சங்கத் தமிழ்ச்சொக்கர் என்றென்று சந்ததநீ
பழகிய சொற்குப் பயன்தேர்ந்து வாவிங்கென் பைங்கிளியே.

(கு - ரை.) **தலைவி கிளியைத் தூதுவிடுத்தல்**. அங்கயற்கண் - மீனாட்சியம்மையார், இஃது அன்மொழித்தொகை. 'கிளியே, நீ முன்னெல்லாம் புழுகுநெய்ச் சொக்கர் முதலாகத் தலைவர் பெயரைப் பலமுறை கூறிப் பழகினையே அதன் பயனாக நீ இப்பொழுது தலைவர்பாற் சென்று என் வருத்தத்தைக் கூறி வா' எனத் தலைவி கிளியைத் தூதாக விடுத்தது. பயன் தேர்ந்து வா என்பதற்குத் தலைவர் என்மாட்டு அன்புடையரா என்பதைத் தெரிந்துவா என்றலுமாம். ௫௩

### நேரிசைவெண்பா

பைந்தமிழ்தேர் கூடற் பழியஞ்சி யார்க்கவமே
வந்தவொரு பெண்பழியென் வாழ்த்துகேன்—அந்தோ
அடியிடுமுன் னையர்க் கடுத்தவா கெட்டேன்
கொடியிடமாய்ப் போந்த குறை.

(கு - ரை.) சோமசுந்தரப் பெருமான் உலாப்போதற்கு வாயிலைக் கடந்ததும் அங்குவந்த ஒரு பெண் மீனாட்சியம்மையார் இடப்பா லமர்ந்திருப்பது கண்டு தனக்கும் அவ்வகை வாழ்வு வேண்டுமென்று விரும்பினாள். அதனை யறிந்த அவள் தோழி இவ்வாறு விரும்பிய இவள் கருத்து முற்றுதாயின் பழியஞ்சிய பெருமானுக்கு வீணே ஒரு பெண்பழி வருமே என்று வருந்திக் கூறினாள். கொடியிடமாப் போந்தகுறை என்பது, உமைத்தேவி யார் இடப்பக்கத்தில் வீற்றிருந்தகுறை எனவும் காக்கை இடப் புறமாக வந்ததனாலாகிய குற்றமெனவும் பொருள்படும். ௫௪

## காலம், மடக்கு

### தாழிசை

குறுமுகைவெண் தளவளவில் மணந்துவக்குங் காலம்
　　கொழுநரொடும் இளமகளிர் மணந்துவக்குங் காலம்
மறுகுதொறு நின்றெமர்கள் உருத்திகழுங் காலம்
　　வரிசிலைகொண் டுருவிலியும் உருத்திகழுங் காலம்
சிறுமதிநம் பெருமதியின் உகப்படருங் காலம்
　　தென்றலிளங் கன்றுமுயிர் உகப்படருங் காலம்
நிறையினொடு நாணினொடும் அகன்றிரியுங் காலம்
　　நேசர்மது ரேசர்வரை அகன்றிரியுங் காலம்.

(கு - ரை.) இச்செய்யுள், **மாலைக் காலங்கண்ட தலைவி வருந்திக் கூறியது :** வெண்தளவுக் குறுமுகை - வெண்மையான முல்லை யின் சிறிய அரும்புகள். மணம் துவக்கும் காலம் - மணம் வீசத் தொடங்குங் காலம். கொழுநர் - கணவர். மணந்து உவக்கும் - சேர்ந்து மகிழும். எமர் - எம்மவர்கள். உருத்து - சினந்து. உருவிலி - காமன். உருவில்லாத காமனும் சிலைதாங்கி உருவோடு வெளிப்படுங் காலமென்க. பெரு மதியின் உகப்பு - பெரிய அறி வின் மகிழ்ச்சி. அடரும் - அழிக்கும். உயிர் உகப்படரும் - உயிர் கெடுமாறு உலாவும். அகன் திரியும் - நெஞ்சம் மாறுபடும். வரை அகன்று இரியும் காலம் - வரையின் அகன்று சென்ற காலம். அகன்று சென்ற காலம் துவக்கும் காலம் முதலாகக் கூறப் பட்டது. ௫௫

### நேரிசைவெண்பா

அம்மாநம் மேலன்று பட்ட தருட்கூடற்
பெம்மான்மேற் பட்ட பிரம்படியே—இம்முறையும்
இம்மேனி காமநோய்க் கீடழிந்த வாவடிகள்
செம்மேனிக் குண்டாங்கொல் தீங்கு.

(கு - ரை.) **தலைவி கூற்று:** அன்று நம்மேற்பட்டது பெம் மான் மேற்பட்ட பிரம்படி. இன்று இந்த எனது மேனி காம நோய்க்கு வலி கெட்டதால் அப் பெருமானது திருமேனிக்கும் ஏதேனும் தீங்கு உண்டாயிருக்குமோ எனத் தலைவி தோழிக்குக் கூறினாள். உண்டாங்கொல் என்றல், உண்டாயின் வந்து நம்மை அணைந்திருப்பாரன்றோ என்பதைக் குறிப்பதாகும். ௫௬

### சித்து

### கட்டளைக்கலிப்பா

குரும்பை வெம்முலை சேர்மது ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாம்
கரும்பை முன்புகல் லானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல் பசும்பொன்ன தாக்கினேம்
இருந்த வீடும் வறும்பாழ தாமவர்க்
கெருத்துக் கொட்டிலும் பொன்னேய்ந் திடசசெய்தேம்
அருந்த னந்நமக் கோதன மேயப்பா
ஆட கத்துமற் றுசையவ் வையர்க்கே.

(கு - ரை.) சித்து என்பது 'இரசவாதிகள்' தம் பெருமையை ஒருவனிடத்துக் கூறும் இலக்கணத்தை யுடையது. வெம்முலை - மீனாட்சி யம்மையார். கரும்பு கல்லானைக்கிடுஞ் சித்தர் - சோம சுந்தரப்பெருமான். இவ வரலாற்றைக் **கல்லானைக்குக் கரும்பருத் திய படல**த்திற் காண்க. செங்கல் என்பது மண்ணை நீர்விட்டுக் குழைத்துக் கட்டளையால் அறுத்தவழி உண்டாவது எனவும், செவ்விய மகாமேரு எனவும், வறும்பாழ் என்பது நுகரப்படும் பொருளில்லாமை எனவும், அறிவுவெளி யெனவும், எருத்துக் கொட்டில் பொன் எய்ந்திடச் செய்தல் என்பது மாட்டுக் கொட்டிலைப் பொன்னாகும்படி செய்தலெனவும், (சிவபிரா னது எருதாகிய) திருமாலுக்குப் பொருந்திய மனைவி பொன்

என்னும் பெயர் புனையச் செய்தலெனவும், அருந்தனம் நமக்கோ தனமென்பது ஒகோ நமக்கு இச் செல்வம் ஓரரிய செல்வமா எனவும், நமக்கு அரியசெல்வம் சோறேயெனவும், ஆடகம் பொன் எனவும், நடிக்குமிட மெனவும் பொருள்படும். அப்பா என்பது சித்தர்கள் வழங்கும் சொல்விழுக்காடு. ௩௭

மடக்கு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஐய மணிக்கல மென்பணியே
அன்பணி யக்கொள்வ தென்பணியே
மெய்யணி சாந்தமும் வெண்பலியே
வேண்டுவ தாங்கொள வெண்பலியே
எய்ய எடுப்பதொர் செம்மலையே
ஏந்தி யெடுப்பதொர் செம்மலையே
வையகம் வாய்த்த வளம்பதியே
வாழ்வது கூடல் வளம்பதியே.

(கு - ரை.) ஐய - அழகிய. என்பு அணி - எலும்புமாலை. அன்பு அணிய - அன்பு பொருந்த. என் பணி - என்னுடைய தொண்டு. வெண்பலி - வெண்மையான திருநீறு. எண்பலி - இகழத்தக்க பிச்சை. செம்மலை - சிவந்த பொன்மலையாகிய மேரு. செம்மல் - திருமகனாராகிய முருகக் கடவுள். வாய்ந்தவள் அம்பதி - பெற்ற உமைத்தேவியாரின் அழகிய கணவர். ஏந்தி அணைப்பதும் என்பதும் பாடம். ௩௮

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஏடார் புண்டரிகத் திளமான் முதுபாடல்
எழுதா மறையோடும் இசைமுத் தமிழ்ப்பாடப்
பீடார் கூடல்வளம் பாடா ஆடல்செயும்
பெருமான் முன்சென்றாள் சிறுமான் என்சொல்கேன்
பாடாள் அம்மனையும் நாடாள் எம்மனையும்
பயிலாள் தண்டலையும் முயலாள் வண்டலையும்
ஆடாள் மஞ்சனமும் தேடாள் அஞ்சனமும்
அயிலாள் அன்னமுமே துயிலாள் இன்னமுமே.

(கு - ரை.) இது, தலைமகள் வருத்தங் கண்ட சேவிலி கூற்று: ஏடு - இதழ். புண்டரிகத்து இளமான் - நாமகள். முது பாடலாகிய மறை யென்க. இளமான் மறையோடு முத்தமிழும் பாட அதனாற் பெருமை பொருந்திய மதுரை என்க. பாடா - பாடி. ஆடல்செயும் பெருமான் - கூத்தாடும் பெருமான். சிறுமான் - சிறுபெண். எம்மனையும் - எந்த வீட்டையும்; எம்முடைய வீட்டினையும், இது தோழிகள்வீட்டைக் குறித்தது. தண்டலை - சோலை. வண்டல்-விளையாட்டு. மஞ்சனம் - நீராடுதல். அஞ்சனம் - கண்ணுக் கிடும் மை. அயிலாள் - உண்ணாள் ௫௬

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இன்னியந் துவைப்பச் சங்கம்
ஏங்கிடச் செழியர் ஈன்ற
கன்னியை மணந்தே யன்றோ
கன்னிநா டெய்தப் பெற்றார்
மின்னிவள் முயக்கும் பெற்றால்
வெறுக்கைமற் றிதன்மே லுண்டோ
கொன்னியல் குமரி மாடக்
கூடலம் பதியு ளார்க்கே.

(கு - ரை.) இது, செவிலி கூறியது; பாங்கி கூறியதுமாம்: இயம் - வாச்சியம். துவைத்தல் - ஒலித்தல். கன்னிநாடு - அழிவில்லாத பாண்டியநாடு. மின் இவள் - மின்னல் போன்ற இப் பெண். முயக்கு - சேர்க்கை. வெறுக்கை - செல்வம். கொன் - பெருமை. குமரி - அழியாமை. நல்ல இலக்கணமுடைய பெண்ணை மணந்தால் அளவில்லாத செல்வம் பெருகுமென்பது நூற்றுணிபு. வெறுக்கைக்கு ஏதுவாகிய முயக்கை வெறுக்கை என்றார்; இஃது முகமன். ௬0

கார்

விருத்தக்கலித்துறை

கேளார் புரஞ்செற்ற வின்னாரி
தோயக் கிளர்ந்துற்றதோர்
தோளாளர் கூடற் பதிக்கேகு
முகில்காள் சொலக்கேண்மினோ

வாளாவொர் மின்னுங்கண் மழைசிந்த
என்சொல் மறுத்தேகன்மின்
தாளாண்மை அன்றோ தளைப்பட்ட
ஊரில் தனித்தேகலே.

(கு - ரை.) **தலைவன் கூற்று:** தலைவன் கார்காலத்து மீண்டு வருவதாகத் தலைவியிடங் கூறி வினைவயிற் பிரிந்து வினைமுடித்து மீளுங்கால் தனக்கு முன்னாக மதுரையை நோக்கிச் செல்லும் முகில்களைக் கண்டு தலைவி இவற்றைப் பார்த்து வருந்துவாளே ன வுட்கொண்டு அம் முகில்களை நோக்கிக் கூறியது இச் ய்யுள். கேளார் - பகைவர். வில் நாரி - வில்லின் நாணாகிய ஆதி சே-டன் என்னும் பாம்பு. அந்நாரி தோளில் தோய்தல் அம்பெய்ய நாணியை இழுத்துப்பிடிக்கும் போதாகும். வாளா - பயனின்றி. மின்னும் - மின்போன்ற தலைவியும். தாளாண்மை - நல்ல முயற்சி. மேகங்கள் தளைப்பட்டமையாவது உக்கிரகுமார பாண்டியரால் புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி யென்னும் நான்கு மேகங்களும் சிறையிடப் பட்டமை. இதனைத் **திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்திற்** காண்க. சுசு

## இடைச்சியார்

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர் வெளுத்த நீற்றர்
எண்டரு மதுரை யிற்சிற் றிடைச்சிபே ரிடைச்சி யென்பீர்
தொண்டைவா யமுதிட் டென்றன் பாலிங்குத தோயீர் வாளா
மண்டுமென் அகத்தில் என்னீர் மத்திட்டு மதிக்கின்றீரே.

(கு - ரை.) இடைச்சியாரென்பது தெருவில் தயிர்விற்கும் இடைசசியைக் கண்டு வேட்கை கொண்ட காமுகனொருவன் தன் விருப்பதைப் புலப்படுததிக் கூறும் இலக்கணமுடையது. காமர் மெய் கறுததலாவது அழகிய தமது திருமேனியில் இடப்பாதி கறுத்துத் தோன்றுதல்; அன்றிக் காமன் உடலைச சினந் தெரித் தலுமாம். சிற்றிடைசசி - சிறிய இடையை யுடையவள். பேர் இடைசசி - பெரிய இடைக்குலத்திற் பிறந்த பெண். தொண்டை - கொவவைக்கனி. வாய் அமுது - இதழூறல். தோய்தல் - கூடுதல். இது பாலை அமுதிட்டுக் கடையுஙகளெனவும் பொருள் தருதல் காண்க. வாளா - சும்மா. அகம் - நெஞ்சம். மத்து - மயக்கம். மதித்தல் - கலக்குதல். இது தயிரில்லா என் வீட்டில் என் மத்தை யிட்டுக் கடைகின்றீர்களெனவும் பொருள் தருதல் காண்க. சுஎ

கட்டளைக்கலித்துறை

ஈர மதிக்கும் இளந்தென் றலுக்குமின் றெய்யுமதன்
கோர மதிக்குங் கொடுங்கோலு மேகொடுங் கோன்மைமுற்றும்
தீர மதிக்குஞ்செங் கோன்மையென் னுஞ்சில தேவர்மதி
சோர மதிக்குங் கடல்தீ விடங்கொண்ட சொக்கருக்கே.

(கு - ரை.) திங்களினாலும் தென்றலினாலும் தனக்கு மிகும் வருத்தம் பொறாது தலைவி இரங்கிக் கூறியது: ஈரமதி - குளிர்ந் திங்கள். இன்று - இன்றி. மதன் கோரமது இக்கு - காமன் அச்சந்தரும் கரும்புவில். கொடுங்கோல் - கொடிய மலரம்பு மதிக்கும் இரண்டனுள் முன்னது வரையறுத்துச் செலுத்த என்றும், பின்னது கடையும் என்றும் பொருள்படும். காமன் குடையும் தேருமாய் என்னை வருத்தும் திங்களையும் தென்றலையும் அடக்காமல் அவனது வில்லையும் அம்புகளையும் அவற்றின் தீமை தீர அடக்கிய இவரது செங்கோன்மைப்புகழ் யாது பயனுடைத் தெனத் தலைவி இரங்கிக் கூறினாள். கோரமது என்பதில், அது பகுதிப் பொருள் விகுதி. ௬௩

வஞ்சிவிருத்தம்

கரிய கண்டங் கரந்தவோர்
கிருபர் கூடலின் நெஞ்சிரே
உருவ மும்பெண் ணுருக்கொலாம்
அருவம் என்பதென் ஆவியே.

(கு - ரை.) இது, நலம் பாராட்டல்: கிருபர் கூடல் - சோம சுந்தரக் கடவுளுடைய மதுரை. நெஞ்சிரே - நெஞ்சம் வைத்த வர்களே; அஃதாவது பற்றுடையவர்களே என்றவாறு. என் ஆவி அருவம் என்பது என் (அதன்) உருவமும் பெண் உருக் கொல் ஆம் - என்னுடைய உயிரை அருவமென்று கூறுவது என்னை? எனது உயிரின் வடிவமும் பெண் வடிவமாம். தலைவன் தான் கலந்த பெண்ணினையே தன்னுயிராகக் கருதிக் கூறலின், நெஞ்சிரே என்பது நெஞ்சினை விளித்ததுமாம். இனிச் சோம சுந்தரப் பெருமானைக் காதலித்த பெண்களை நோக்கி ஒருத்தி கூறியதாகவும் இச் செய்யுட்குப் பொருள்கொள்ளுதல் கூடும். அஃதாமாறு:—கிருபர் கூடலின் நெஞ்சிரே - சோமசுந்தரப் பெரு மான் வந்து கூடுதலின் நெஞ்சங் கொண்ட பெண்களே, உருவ மும் பெண் ணுருக் கொலாம் - அவரது எடுத்த வடிவமும் அம்மை

வடிவமாம், என் ஆவி அருவ மென்பது - தன் உயிர் அவரது அருவ வடிவம் அருவமென்று கூறுவது. இவ்வாறாயின் நீவிர் அப்பெருமானைக் கூடுவதெவ்வாறு என்பதாம். ௬௪

### விருத்தக்கலித்துறை

ஆவா என்னை தென்னவர் கோற்கன் றணிசாந்தம்
நீவா நின்றாய் நின்றில காமா னலமென்னே
கோவாம் வில்லி கொடுத்தனு வுங்கூன் நிமிராதான்
மூவா முதலார் மதுரையி தன்றோ மொழிவாயே.

(கு - ரை.) இது, தலைவி கூற்று. ஆஆ - இரக்கக் குறிப்பு. தென்னவர்கோன் - பாண்டியன். அன்றணி சாந்தம் - அன்று திருஞான சம்பந்த நாயனார் பூசிய திருநீறு. நீவுதல் - தடவுதல். காம அனலம் - காமததீ. வில்லி - காமன். தனுவும் கூனிமிராது என்றது சிலேடை. மூவா - மூததலில்லாத. நீ திருநீற்றை என்மேற் பூசுகின்றாய். முன் இங்கே ஆளுடைய பிள்ளையார் திருநீறு பூசியதும் பாண்டிய வரசனுடைய காய்ச்சல் நோய் நின்றது, அவனது உடம்பும் கூனிமிர்ந்தது. ஆனால் எனக்கோ திருநீறு பூசியும் காமக்காய்சசல் நிறகவில்லை, காமனது வில்லும் வளைந்தவாறே (நாணேறிட்டவாறே) யிருக்கின்றது. அதன் கூனும் (வளைவும்) நிமிரவில்லை. ஆதலின், இது மதுரையம் பதியன்றோ எனத தலைவி தோழியை நோக்கி வருததமிகுதியாற் கூறுகின்றாள். ௬௫

### வலைச்சியார்

### அறுசீர்க்கழிநெடிலடி்யாசிரியவிருத்தம்

மொழிக்கய லாகி வேத முடிவினின் முடிந்து நின்ற
வழிக்கய லாகார் கூடல் வலைவாணர் பெருவாழ் வன்னீர்
கழிக்கயல் விற்பீர் மற்றிக் காசினி யேழும் உங்கள்
விழிக்கய லுக்கே முற்றும் விலையென்ப விளக்கிட் டீரே.

(கு - ரை.) வலைசசியா ரென்பது மீன் விற்கும் வலைஞர் மகளைக் கண்டு காமுற்றா னொருவன் அவளை நோககித் தன் வேட்கையை வெளிப்படுத்திக் கூறியதாக வரும் இலக்கணத்தை யுடையது. மொழிக்கு அயலாகலாவது - சொல்லின் எல்லையைக் கடந்து நிற்றல். வேதமுடிவு - உபநிடதம். அம்முடிவினின்

முடிந்துநின்றவழி - சித்தாந்தம். இதனை 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்' எனவும், 'வேதத்தலைதரு பொருள்' எனவும் வரும் சந்தானசாரியார் திருவாக்கானும், 'ஓரும்வேதாந்த மென் றுச்சியிற் பழுத்த, ஆரா வின்ப அருங்கனி பிழிந்து, சாரங் கொண்ட சைவசித்தாந்தத், தேன்' என வரும் இவ்வாசிரிய சூற்றானும் அறிக. அவ்வழிக்கு அயலாகார் என்றது அவ்வழியி எல்லை கடவாதவ ரென்றவாறு; அஃதாவது அவ்வழியிற் செ வோரால் அறியப்படுவ ரென்பதாம. அவர் சோமசுந்தரக் கடவு அவரது கூடலென்க. கூடலில் வாழும் வலைவாணருடைய பெ வாழ்வு போன்ற பெண்ணே என்க. இவ்வாறன்றி வழிக்கும் லாகாராகிய கூடல் வலைவாணரென்று கூட்டிச சோமசுந்தர கடவுளுடைய பெருவாழ்வு போன்றவரே என்பாருமுளர். முல இடைச்சியாரில் 'கண்டமுங் காமர் மெய்யுங கறுத்தவர் வெளுத்த நீற்ற, ரெண்டருமதுரை' எனவும், கொற்றியாரில் '... ..அவர்தங் கருநாமந் துடைக்கும் பெற்றியார் தமிழ் மதுரை' எனவும் மதுரையே சிறப்பித்துக் கூறப்பட்டதாகலின், அவற்றிற் கேற்ப ஈண்டும் கூடலையே முற்சொற்றொடர் சிறப்பித்து நின்றதன்றி வேறன்மையின் அது பொருந்தாது. கழிக்கயல் - உப்பங்கழியி லுள்ள கயல்மீன். காசினி எழும் - நிலவுலகிலுள்ள ஏழுதீவுகளும். ஏழுதீவுகளாவன - சம்புத்தீவு, பிலக்கத்தீவு, குசத்தீவு, கிரௌஞ் சத்தீவு, சாகத்தீவு, சான்மலித்தீவு, புட்கரத்தீவு என்பன. விலை யென்ப - விலையென்பது. ௬௬

## நேரிசைவெண்பா

விற்கரும்பே ஒன்றிதுகேள் மென்கரும்பே அன்னார்தம்
சொற்கரும்பே முற்றுமலர் தூற்றுமால்—நற்கரும்பை
ஆளார் கடம்பவனத் தையருமற் றென்னியும்
வாளா அலர்தூற்று வாய்.

(து - ரை.) இது, தோழி தலைவியின் வருந்தத்திற் காற்றது காமனது கருப்புவில்லை நோக்கிக் கூறியது: விற்கரும்பே - காமனது வில்லாகிய கரும்பே. மென்கரும்பே யன்னார் - மெல் லிய கரும்புபோன்ற மகளிர்; கரும்பேயை யன்னரெனச் சுற்றத் தாரைக் கருதிக் கூறியதாகக் கோடலுமொன்று. கருமை - பருமை. சொற் கரும்பு - சொல்லாகிய கரும்பு. அலர் தூற்றும் - பழி தூற்றும். கடம்பவனத்தையரும் நற்கரும்பையாளா ரென்க. அலர் தூற்றுவாய் - மலர்க்கணைகளைத் தொடுத்துச் சொரிவாய். ௬௭

### கட்டளைக்கலிப்பா

வால விர்த்த குமாரன் எனச்சில
வடிவு கொண்டுநின் றுமென்று வம்பிலே
ஞால நின்னை வியக்கு நயக்குமென்
நடனங் கண்டும் வியவாமை என்சொல்கேன்
பால லோசன பாநுவி லோசன
பரம லோசன பக்த சகாயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே.

(கு-ரை.) சிவபெருமான் இளையராயும், கிழவராயும், வாலிபராயும் வந்த வரலாற்றை விருத்த குமார பாலரான படலத்திற் காண்க. வம்பு - வீண். ஞாலம் - ஆகுபெயர். ஞாலம் வியக்கும் - உலகத்தார் வியப்பார்கள். நயக்கும் - சிறக்கும்; விரும்புமாம். நயக்கும் என் நடனமாவது பலபிறவிகளெடுத்து அவ்வப் பிறவி தோறும் இளையராயும் வாலிபராயும் கிழவராயும் வருதல். பாலம் - நெற்றி. லோசனம் - கண்; அது தீக் கண். பாநு - கதிரவன். பரமன் - இங்கே திங்களை யுணர்த்திற்று; மேல் 'பால லோசன பாநுவி லோசன' என்றமையால், பக்த சகாய - அடியார்க்குத் துணையாயுள்ளோனே. மாகால கால - பெரிய காலனுக்குக் காலனே. சாம்ப - உமையோடு கூடியுள்ளோனே. கூஅ

### கலிவிருத்தம்

கட்டு வார்குழ லீர்கயற் கண்ணினாட்
கிட்ட மாஞ்சொக்க ரைக்கரை யேற்றினீர்
மட்டில் காம மடுப்படிந் தேற்கென்னே
கொட்டு வீர்பின்னுங் குங்குமச் சேற்றையே.

(கு-ரை.) இது, தெப்பத் திருவிழா முடிவில் சோமசுந்தரப் பெருமானது எழுச்சிப் பொலிவு கண்டு காதலித்த தலைவி கூறியது: வார்குழல் - நீண்ட கூந்தல். கரையேற்றுதலாவது தெப்பத்தினின்றும் கரையிலே எழுந்தருளச் செய்தல். மட்டு - அளவு. காம மடு - காமமாகிய பெரிய நீர்நிலை. குங்குமச்சேற்றைக் கொட்டுவீர் என்னே என்க. விரகமிக்க தலைவிக்குக் குங்குமச் சேறு முதலியன துன்பந் தருவனவாதலின், இவ்வாறு கூறினாள்.

விரும்பினர் விரும்பப்பட்டாரென்னு மிருவருள் ஒருவரைமட்டுங் கரையேற்றி மற்றொருவரைக் கரையேற்றா திருத்தலேயன்றி மேலும் வருத்துதல் முறையன் றென்றவாறு. ௬௬

## நேரிசைவெண்பா

குங்குமச்சே றாடுங் கொடிமாட வீதியில்வெண்
சங்குமொய்க்கும் சங்கத் தமிழ்க்கூடல்—அங்கயற்கண்
அம்மையிடங் கொண்டாரை அஞ்சலித்தேம் அஞ்சலமற்
றிம்மையிடங் கொண்டார்க் கினி.

(கு - ரை.) ஆடும் - நிரம்பும்; ஆடும தெருவென்க. சங்க தமிழக் கூடல் - சஙகததிற்பயின்ற தமிழ விளஙகிய மதுரை. அம்மை இடங கொண்டாரென்க. அஞ்சலம் - அஞ்சமாட்டோம். மையிடம் - எருமைக்கடா; இயமனுக்கு எருமைக்கடா ஊர்தியாக லான், அதைக கொண்டாாககு 'இனி அஞ்சலம்' என்றார். மஹிஷம் என்னும் வடசொல் மயிடமென்றாய் எதுகை நோக்கிப் போலிபெற்று மையிடமென்றாயிற்று. ௬௭

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இன்னீ ரமுதுக் கிடமுங் கடுவுக்
கெழிலார் களனுங் களனு வருளா
நன்னீர் அமுதக் கடலா கியுளார்
நரியைப் பரியாக் கிநடத் தினரால்
அந்நீர் மையின்மிக் கென்னீர் மையென
அடன்மா மடன்மா வரமா றுசெயா
மைந்நீ ரளகத் திளமா னையனீர்
வருவேன் மதுரைத் திருவீ தியிலே.

(கு - ரை.) இது, தலைவன் தான் நாணிழந்தமை வெளியிலே தோன்றுமாறு யான் மடலூர்வேனெனக் கூறுதல்: அமுது என்றது உமையம்மையாரை. இடம் - இடப்பக்கம். கடு - நஞ்சு. களனிரண்டனுள் முன்னது கழுத்து, பின்னது இடம். அருளா - அருளி. அமுதக்கடலாகியுளார் - சோமசுந்தரக் கடவுள். நரியைப் பரியாக்கி நடத்தினமை நரியைப் பரியாக்கிய படலத்திற் கண்டுகொள்க. அந்நீர்மையின் மிக்கு என் நீர்மை - எனது தன்மை நரியைப் பரியாக்கிய தன்மையினும் மிக்கது. மிக்கு -

மிக்கது என்பதன் விகாரம். மிக்கதாவது - ஒரு விலங்கினை கற்ரோர் விலங்காக்குவதினும் ஒரு மரத்தினொருறுப்பினை விலங் மாக்குதல். மடல்மா அடல்மாவர - பனை மடலாற் செய்யப்பட்ட குதிரை வலிய குதிரையாய் வருமாறு. மாறு செய்தல் - மாற்று தல். மை நீர் அளகம் - கரிய தன்மையை யுடைய கூந்தல். "தோட்டின் மீதுசெல் விழியினய் தோகையோ டென்னைக், கூட்டி டாயெனிற் கிழிதனி லாயகவள் கோலந், தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனி, லோட்டு வேனிது நாளையான் செய்வதென் றுரைத்தான்" என வருங் கந்தபுராணச் செய்யுளும் ஆ. இது மடலேறும் வகையுரைத்த லென்னுந் துறை. எக

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருவைப் புணர்பொற் புயமைப புயல்கைத
திகிரிப் படையுய்த் தவர்கூடல்
தருமொய்த் தருமைச் சிறைபெற் றனமுத்
தமிழ்வெற் பமர்பொற் கொடிபோல்வீர்
புருவச் சிலையிற் குழைபட் டுருவப்
பொருகட் கணைதொட் டமராடுஞ்
செருவில் தொலைவற் றவரைக் கொலுநற்
சிலைசித் தசர்கைச் சிலைதானே.

(கு -ரை.) இது, தலைவன் வருத்தமிகுதியாற் கூறியது: புயலென்றது, திருமாலை. திகிரி - ஆழி. படையைச் சலந்தரா சுரன் மீது உய்த்தவரென்க. சலந்தராசுரனைக் கொல்லுதற் பொருட்டுச் சிவபெருமான் தன் காற் பெருவிரலால் விளையாட் டாக வரைந்த ஆழியைப் பின்னர் அதன் பெருமை கண்டு திருமால் பெற்றன ரென்பதறிக. கூடலிலேயுள்ள கொடி போன்றவர்களே யென்க. அக்கொடி வெற்பமர் பொற்கொடி. மரங்கள் மொய்த்தலினாலே முன் இழந்த அரிய சிறகுகளை மீண்டும் பெற்றாலொத்த தமிழ வெற்பாகிய பொதியமென்க. சிறைபெற்றன என்பதற்குச் சிறைக் காவலைப் பெற்றாலொத்த என்று பொருள் கோடலுமாம். குழையிலே பட்டுருவுமாறு புருவ மாகிய சிலையிலே கண்ணாகிய கணையைத் தொடுத்துப் பொரும் போரென்க. குழை - இங்கே காதினை யுணர்த்திற்று. காதளவு நீண்ட கண் என்றவாறு. தொலைவு அற்றவர் - நீங்குதலில்லாத வர்; அவராவார் காதல் கொண்டோர். அவரைக் கொல்லுகின்ற நல்ல சிலையாவது காமன் கைச்சிலை யென்றவாறாம். எஉ

## கட்டளைக்கலித்துறை

சிலைசிலை யாக்கொண்ட தென்மது ரேசர் சிலம்பில்வில்வேள்
மலைசிலை யாக்கொண்ட வாணுத லாய்நின் மருங்குல்சுற்றும்
இலைசிலை யாக்கொண் டிளமானை யெய்திடும் இங்கிவர்பூங்
குலைசிலை யாக்கொண் டவர்போலுமாற்செம்மல் கொள்கைநன்றே.

(து - ரை.) இது, பாங்கி தலைவனை நகையாடித் தலைவிக்குக் கூறியது : சிலைசிலையாக் கொண்ட தென்மதுரேசர் - மலையை வில்லாகக் கொண்ட சோமசுந்தரக் கடவுள். சிலம்பு - மலை. வே மலைசிலை - காமன் மலைதற்குரிய வில். அததகைய வில்லாக கொண்ட நெற்றியை யுடையவளே யென்க. மருஙகுல் சுற்றும் இலை - இடையிலே உடுத்தும் தழை. அதனைச சிலையாக கொண்டு மானை யெய்தலாவது, தலைவன் தலைவிக்குக் கொடுக்குட கையுறையாகிய தழையைக் கொண்டு அதனால் மானைத துரத்திச செல்லுதலாம். இவர் - தலைவர். பூங்குலை - பூஙகொத்து. சிலை - கல். பூங்குலை சிலையாக் கொண்டவர் சாககிய நாயனார். தலைவன் கருத்துத் தலைவிபால் தழையைக் கையுறையேற்பிததலாகவும் இப்பொழுது அதனை மானைத் துரத்துதற்குத் தாஙகிச செல்லுதலின், கருத்துவேறு செய்கை வேறாகக் கொண்ட சாக்கியநாயனார் போலுமென்று கூறினாள். இதற் கிவவாறன்றிப் பூங்கொத்தினைச் சிலையாகக் கொண்ட காமனார்போலு மென்றலு மொன்று. இப் பொருட்குத் தலைவர் தழையை வில்லாகக் கொண்டிருப்பினும் அவர் நம்பால் விளைக்கும் காதலை நோக்கின் பூஙகொத்தினை வில் லாகக் கொண்ட காமனார் போலுமென வியந்ததாகக் கொள்க. செம்மல் - தலைவர். எ௩

## பாண்

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கொங்குறை யாற்றில் இட்டுக் குளததினில் தேட நீடு
மங்குல்தோய் முதுகுன் றையா மதுரையோ மதியில் பாண
எங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்தி மற்றம்
மங்கையர் மனம்போல் அன்றே மகிழ்நர்தம் வாழ்க்கை தானே.

(து - ரை.) இது, பாணனொடு வெகுளுதலென்னுந் துறை : அஃதாவது தலைவன் பரத்தைபால் நீடியதால் தலைவி யூடியிருந் தாளாக அவளை அது தீர்த்தல் கருதி அவள் கருத்தறிந்து வழிப் படுத்தித் தான் வருவதற்குப் பேசி மீளுமாறு தலைவனால் விடுக்கப்

பட்ட பாணனைத் தலைவி வெகுண்டு கூறுதலாம். கொங்குரை - மாற்றுயர்ந்த பொன். இது கொங்கம் பொன்னென முற்காலத்து வழங்கியதென்ப. உரை - கல்லிலே உரைக்கப்படுவதால் பொன்னைக் குறித்தது. முதலிரண்டடிகளிற் குறிப்பிடப்பட்ட வரலாறு: சுந்தரமூர்த்தி நாயனார் திருமுதுகுன்றமெனப்படும் விருத்தாசலத்திற் சிவபெருமானைப் பாடிப் பன்னீராயிரம் பொன் பெற்று அதனைச் சிவபெருமான் அருளியபடி அங்குள்ள மணிமுத்தா நதியிலேயிட்டுப் பின் திருவாரூர் சென்று அங்கே ஆலயத்துள்ளால் உள்ள குளத்திலிறங்கித் தேடிப் பதிகம்பாடிப் பெற்றனரென்பதாம். இதனைப் **பெரிய புராணத்திற்** காண்க. ஆற்றில் பொன்னையிட்டுப் பின் குளத்திற் றேட அது கிடைத்தற்கு ஏதுவாயிருந்த முதுகுன்று எம்பெருமானுடைய மதுரையோ என்க; முதுகுன்றையர் சிவபெருமானெனக் கொண்டு அவரது மதுரையோ இஃது என்றலுமொன்று. எங்கையர் - எம் சக்களத்திகள். வைத்தல் - தலைவனை இருத்துதல். மகிழ்நர் - கணவர். எம் கணவர் வாழ்க்கை அம்மங்கையர் நெஞ்சம்போன்றதன்றோ என்க. எச

## நேரிசைவெண்பா

வாழிமடக் கிள்ளாய் மதரா புரிவாழும
ஊழி முதல்வர்க் குருவழிந்தே—ஆழியான்
சேய்தொடுத்த அமபோ திரள்முலையும் கண்மலரும்
தாய்தொடுத்த வம்போ தலை.

(கு - ரை.) இது, **தலைவி கிளியை நோக்கி யிரங்கிக் கூறியது**: வாழி - வாழ்வாயாக. மடமை - இளமை. ஊழி முதல்வர் - சிவபெருமான். அப்பெருமானுக்கு உருவழிதலாவது, அவரால் காமன் உருவில்லாதவனாக ஆக்கப்படுதல். ஆழியான் சேய் - காமன். அவன் தொடுத்த அம்புகளோ திரண்ட முல்லைமலரும் ஏனைய தேனிரம்பிய மலர்களுமாம். தாய் தொடுத்த வம்பு - தாய் கற்பித்துக்கூறிய பழிச்சொல். காமன் தொடுத்த அம்புகளோ வருத்தஞ் செய்யும் முல்லை முதலிய மலர்களாம்; தாய் கற்பித்துக் கூறும் பழிச் சொல்லோ அவற்றினும் கொடிதாயிருக்கின்றதென்றவாறு. கிளியே நீ காமனின் அம்புகளின் கொடுமை மட்டுமோ தாய் தொடுத்த வம்பினையும் ஓதினை யல்லை யென்றலுமொன்று. காமன் தொடுத்த அம்புகளோ முலையளவும் கண்ணளவுமாகத், தாய் தொடுத்த வம்போ தலையளவாயிற்றெனப் பொருள் படுதலுங் காண்க. உருவழிந்தேன் என்பது பாடம்.

## மறம்

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தருமுகத்து நிமிர்குடுமி மாடக் கூடற்
சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரில் ஆற்று
தொருமுகத்தில் ஒருகோடி மன்னர்மடிந் தொழிந்தார்
உனைவிடுத்த மன்னவர்யார் உரையாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பான்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தை சொன்னாய்
திருமுகத்தில் எழுத்திதுவேல் திருமுடியில் எழுத்தும்
தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினொடுஞ் சென்றே.

(கு - ரை.) மறமென்பது, ஓரரசன் மறவர் மகளைத் தனக்கு மணம்பேசி வருமாறு ஒரு தூதனை விடுக்க, மறவர்கள் மணத்தினை மறுத்து அவ்வரசனையு மிகழ்ந்து கூறியதாகப் பாடும் இலக்கண முடையது. தருமுகம் - 'கற்பகதரு'வின் நுனி. நிமிர்தல் - உயர்தல். குடுமியென்றது மாடங்களின் சிகரங்களை. யாம் சவுந்தர பாண்டியர் குடி - யாங்கள் சௌந்தரபாண்டிய ராட்சிக்குட்பட்ட குடிகள். சமர் - போர். ஒரு முகம் - ஒரு பக்கம். மன்னர் மடிந் தொழிந்தா ரென்றது தங்கள் வீரத்தைக் கூறியதாம். மருமுகத்த நெறிக்குழல் - இயற்கை மணத்தையுடைய நெறித்த கூந்தல். திருமுகம் - ஓலை. திருமுடியிலெழுத்து - தலையெழுத்து. சிகை - குடுமி. திருமுகத்தெழுத்துத் தெரிந்தோம்; திருமுடி யெழுத்துந் தெரிதற்குச் சிகையோடுங் கொண்டுவா என்றவாறு. எசு

## குறம்

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

செல்லிட்ட பொழில்மதுரைத் தேவர்மணந் தடாதகா
தேவிக் கன்று
சொல்லிட்ட குறமகளயான் தும்மலுநல் வரத்தேகாண்
சுளகி லம்மை
நெல்லிட்ட குறிக்குநீ நினைந்தவொரு பொருளதுவித்
திலக்கச் சார்க்கும்
வல்லிட்ட குறியினொடும் வளையிட்ட குறியுளதோர்
வடிவு தானே.

(கு - ரை.) குறமென்பது, குறத்தி தலைவிக்கு அவள் காமுற்ற லைவன் வாய்ப்பைக் குறிதேர்ந்து கூறுவதாகப் பாடும் இலக்கண டையது. செல் - மேகம். சொல்லிட்ட - குறிசொல்லியிட்ட. த்து - வருதல். அம்மை தலைவியைக் குறித்தது. நித்திலக் சு - முத்துக்கச்சு. ஆர்த்தல் - கட்டுதல். வல் - சூதாடு கருவி; ங்கே ஆகுபெயராய்க் கொங்கையை யுணர்த்திற்று. நீ நினைந்த பாருளின் வடிவு வல்லிட்ட குறியும் வளையிட்ட குறியுமுள்ள தன்க. மதுரைத் தேவா மணந்தைத தடாதகைப் பிராட்டி ாருக்குயான் கூறினேனெனத் தன் பெருமையைக் குறத்தி வெளி டுகின்றாள். இறைவியின் முலைத்தழும்பும் வளைத்தழும்பும் இறைவா கொண்டமை காஞ்சிப்புராணத்தத தழுவக் குழைந்த படலததிற் காண்க. ௭௭

விருத்தக்கலித்துறை

வடகலை யலபல கலையொடு தமிழ்வள ருங்கூடல்
விடவர வரையினர் திருமுனி தொருவர் விளம்பாரோ
குடதிசை புகையெழ அழலுமிழ் நிலவு கொழுந்தோடப்
படவர வெனவெரு வருமொரு தமியள் படும்பாடே.

(கு - ரை.) இது, தலைவி கூற்று. வடகலை—ஆரிய மொழி யிலுள்ள கலைகள். பலகலை - தமிழல்லாத பிறமொழிகளிலுள்ள கலைகள். தமிழ - தமிழ்மொழியிலுள்ள கலைகள். இம்முத்திறக் கலைகளும் வளர்தற்கு இடமாகிய மதுரை யென்க. பல கலை வளாதற்கு ஏது பலவேறு நாட்டினரும் மதுரைவளங் கண்டு அஙகு வநது நெருங்கி யிருத்தலாம். அரவு அரையினர் - பாம் பினை அரையிலே கட்டியவராகிய சோமசுந்தரக் கடவுள். புகை யெழ - புகையெழுமாறு. அழல் உமிழ நிலவு - தீயைச சொரி கின்ற இளந்திஙகள். குடதிசை கொழுந்து ஓட - மேற்றிசையிலே ஒளியை வீச. அதற்குப் படவரவிற்கு அஞ்சுவாரென அஞ்சும் தமியளாகிய இவள் படும்பாட்டை யொருவரேனும் கூறுரோ எனத் தோழி தலைவி வருதத மாற்றுது கூறுகின்றாள்; செவிலி கூற்றுமாம். புகையென்றது மாலையிருளை. அழல் என்றது சுடரை. ௭௮

கட்டளைக்கலித்துறை

பாட்டுக் குருகுந் தமிழ்சொக்க நாதர் பணைப்புயமே
வேட்டுக் குருகுமெய் நாணும்விட் டாள்வண்டு மென்கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாளென்செய் வாளனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்கென் குலக்கொழுநதே.

(து - ரை.) இது, செவிலி கூற்று: பணைப்புயம் - பருத் தோள். வேட்டல் - விரும்புதல். குருகும் மெய்ந்நாணும் விடு லாவது கைவளையும் இயற்கை நாணுமிழத்தல். பேட்டுக்குரு பெண் நாரை. வண்டு முதலியனவற்றைத் தலைவர்பால் தூது விடுத்தாளென்க. இருகோடு - இரண்டு நுனிகள். குருகு ம வெண் கொழுந்துக்கு - வெண்மையான இளந்திங்களுக்கு. எ கொழுந்து - என்னுடைய குறக்குலக் கொழுந்து. என் செய்வ ளென்க. எ

## மேகவிடுதூது

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஏமவெற் பென்றுகயி லாயவெற் பென்றுமல
யாசலத் தென்றும் உறைவார்
கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
கூடலிற் சென்று புகலீர்
தாமரைக் கண்துயிலும் மாலெனச் சந்தமலி
சாரலில் துஞ்சு முகில்காள்
மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சுமுயிர்
வாய்மடுத் துண்டொழிவதே.

(து - ரை.) இது, மேகத்தைத் தலைவன்பால் தூதுவிடுத்தது: ஏமவெற்பு-மேருமலை. ஏமவெற்புங் கயிலாயவெற்பும் போல மலய வெற்பில் என்றும் உறைபவரும் தடாதகைப் பிராட்டியாரது அன் பருமாகிய மதுரேசரென்க. தலைச்சங்கம் கடல்கோட்பட்ட தென் மதுரையிலும், இடைச்சங்கம் கபாடபுரத்திலும், கடைச்சங்கம் கூடலிலும் நடந்தனவாகவுஞ் சங்கமென்னும் ஒற்றுமை கருதி மூன்று சங்கங்களுங் கூடலில் வளர்ந்தனவாகக் கூறினார்; இனி முச்சங்கமென்பது வெற்றி மங்கலம் கொடையென்னு மூன்றினை யும் குறிக்கும் சங்கு என்றலுமாம். தாமரைக் கண்-தாமரை மலர் போன்ற கண். சந்தம் - சந்தனமரம். துஞ்சுதல் - தங்குதல். மதிப்பிஞ்சு - இளந் திங்கள். வாய் மடுத்தல் - வாயினுட் கொள்ளு தல். அ

## சம்பிரதம்

### மேற்படி வேறு

௨ மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம
றைத்துடன் விடுத்திடுவனேற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவன்
இத்தனையும் வித்தை அலவால்
துட்டமத னைப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
சொக்கர்குணம் எட்டினுடுமா
சிட்டர்கள் துதித்திடும கத்துவமனைத்துமொரு
செப்பினுள் அடக்கிடுவனே.

(கு - ரை.) சம்பிரதமாவது 'சாலவித்தை' முதலியன செய்வார் தம்மைத் தாமே புகழ்ந்து கூறியதாகச் செய்யுள் செய்யும் இலக்கணமுடையது. மட்டு - அளவு. புவியனைத்தும் ஓர் இமைப்பினில் மறைத்து உடன் விடுத்தல் என்றது உலக முழுவதும் ஒரு நொடிப்பொழுதில் மறையும்படி செய்து மீளவுந் தோன்றும்படி செய்தலென்றும் உலகமுழுவதும் கண்ணை இமைக்கின்ற காலத்து மறையும்படி செய்து விழிக்கின்ற காலத்துத் தோன்றும்படி செய்தலென்றும் பொருள்படும. எட்டு வரையைக் கடலை முட்டியுளடக்குதல் என்றது, எட்டுவகை மலைகளையும் ஏழு கடல்களையும் கைப்பிடியுளடங்கும்படி செய்தலெனவும், எள்ளையும் துவரையையும் கடலையையும் சிறு மட்பாண்டத்துள் அடங்கும்படி செய்தலெனவும் பொருள்படும். தன்மை யெட்டு - அளவிலாற்றலுடைமை, இயல்பாகவே மலங்களினீங்குதல், இயற்கையுணர்வினனாதல், தன்னுரிமையனாதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, தூயவுடம்பினனாதல், வரம்பிலின்பமுடைமை யென்பன. சிட்டர்கள் - அடியார்கள். ஒரு செப்பினுளடக்குதல் என்பது ஒரு சிமிழினுளடக்குதலெனவும், ஒரு சொல்லினுள் அடக்குதலெனவும் பொருள்படும். ௮௪

### நேரிசைவெண்பா

அடுத்த பதஞ்சலியார் அஞ்சலியா நிற்ப
எடுத்த பதஞ்சலியா ரேனுந்—தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனிதலென் மாமதனார்
சீறிக் குனித்தார் சிலை.

(கு - ரை.) இது, தலைவி கூற்று: அடுத்தல் - தம் புகலாக அடைதல். அஞ்சலியா நிற்ப - கைகூப்பித் தொ நிற்க. எடுத்த பதம் - தூக்கிய இடது திருவடி. சலித்தல் - தல். தடுத்தவன் - இராசசேகர பாண்டியன். குனித்தல் - ஆடு இப் பாண்டியன் வேண்டுகோட் கிணங்கிக் கான்மாறி யாடி யட யதைத் திருவிளையாடற் புராணத்திற் கான்மாறி யாடிய படலத்தி காண்க. குனித்தல் பின்னிரண்டும் வளைத்தல். சிவபெருமான் திண்ணிய மலையை வில்லாக வளைத்தும் பயனில்லையே, காமன் என்மீது சீறி மெல்லிய கருமபுவில்லை வளைத்துப் போர்தொடங்க லுற்றனனே யெனத் தலைவி இரங்கியது இச் செய்யுள். அஉ

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சிலையோ கருமபுபொரு கணையோ வரும்புசிவ
சிவவாவி லொன்றும உளதோ
இலையோ அறிந்திலமிம் மதனுண்மை என்புகல்வ
திதுவே தவம்பி றிதெனு
முலையே அணிந்தமுகிழ் நகையீரோர் பெண்கொடியின்
முலையோடு முன்கை வளையான்
மலையே குழைநதிடுதம இருதோள் குழைந்துறைநம்
மதுரேசர் தந்த வரமே.

(கு - ரை.) இது, தலைவி இரங்கியது: காமனுக்கு வில்லே கரும்பு, கணையோ அரும்பு, இவற்றில் ஐயப்பாடில்லை. ஆனு அவனுக்கு உயிரொன்று மட்டுமே உளதோ இலதோ யாம் அறிந்தே மில்லை என்றவாறு. காமன் உடலில்லாதவனாதலின் இவவா கூறினள். உடலில்லாதிருந்தும் விலலிலே கணைகளைப் பூட் டெய்கின்றானே என்பதாம. இதுவே தவம் பிறிது என் ஆம் இவவாறு செய்வதே அவனுக்குத் தவமாம்; வேறே யாது ஆகும். முலை - இடைக்குறை. அணிந்த - 'உவமவாசகம்'. முகிழ நகை - வெளித்தோன்றிய நகையினை யுடையீர். ஓர் பெண் கொடியின் .. மதுரேசர் - முன் என - வது செய்யுட் குறிப்புப் பார்க்க. இவவாறு அவன் செய்வது மதுரேசர் தந்த வரமா மென்க. அங

## உருவெளிப்பாடு

### கட்டளைக்கலித்துறை

*அரும்புண்ட ரீகம் இரண்டாலொர் கல்லுமென் வன்னெஞ்சமாம்*
*இரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பில் ஏழ்பரியோன்*
*விரும்புந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றே*
*கரும்புங் கனியும் இளநீரும் பாரெங்கும் கண்களினே.*

(கு - ரை.) இது, **தலைவன் கூற்று**: புண்டரீகம் - தாமரை. இரண்டு - திருக்கரமும் திருவடியும். திருக்கரத்தால் மேரு மலையையும் திருவடியால் நெஞ்சத்தையும் குழைத்த பிரானென்க. ஏழ்பரியோன் - ஞாயிறு. ஞாயிற்றினது தேரிற் பூட்டப்பட்ட குதிரை யொன்று சப்த என்று பேர் பெறுதலின், அவன் ஏழ் பரியோ னெனப்பட்டா னென்ப; இதற்குப் பிறவாறும உரைப்ப. வலவன் - பாகன். இஃது அன்றே - இஃது அன்றோ என்க. இஃது ஆன்று என்றுமாம். கரும்பு தலைவியின் இன்மொழியும், கனி அவளது இதழும், இளநீர் அவள் கொங்கைகளும் குறிப்பன. தலைவியைப் பிரிந்து சென்று வினைமுடித்து மீண்டுவரும் தலைவன் இடைச்சுரத்தில் அவளது உருவெளிப்பாடு கண்டு வியந்து பாகனோடு கூறுகின்றா னென்க. அ௬

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

*கருவிட்ட காடெறிந்து கடம்பவனத் திருப்பீராறுங்*
*கடுக்கைக் காட்டின்*
*மருவிட்ட கொள்ளைவெள்ள மடுப்படிந்து மூண்டெழுமான்*
*மதிததீ கெட்டேன்*
*செருவிட்ட விழிமடவார் வாயிட்டுச் சுடுவதல்லாற்*
*செங்கை யிட்டும்*
*எருவிட்டு மூட்டிடநீர் விறகிட்டு மூட்டியவா*
*என்சொல் கேனே.*

(கு - ரை.) இது, **சோமசுந்தரக் கடவுளது விறத விற்ற திருக்கோலங் கண்டு காமுற்ற ளொருத்தி கூறியது**: கரு இட்டகாடு - பிறப்புப் பொருந்திய காடு. கடுக்கைக் காடு - கொன்றமலர்த் தொகுதி. தாமரைமலரின் தொகுதியைத் 'தாமரைக் காடு' என்றனர் **திருவாதவூரடிகள்**. கொள்ளை வெள்ள மடு - மிக்க

வெள்ளமாகிய மடு; கங்கை. அது கொன்றைமலர்த் தொகுதியின் மணம் பொருந்திய வெள்ளமடு. செரு இட்ட விழி - போர் செய்தலைக் கொண்ட கண். மடவார் வாயிட்டுச் சுடுவதாவது பெண்டிர் பழிதூற்றுதல். மடவார் எருவிட்டு மூட்டுதலாவது இளைய மகளிர் தமக்குத் தக்க மணாளனைப் பெறும்பொருட்டுத் திங்களை எரு விட்டு வணங்குதல். விறகிட்டு மூட்டுதல் - திங்கள் தங்கிய சடையின்மேல் விறகினைத் தாங்குதல். அ௫

## விருத்தக்கலித்துறை

என்போ டுள்ளமும் நெக்குரு கப்புக் கென்போல்வார்க்
கன்போ டின்பு மளித்தருள் கூடலெம் அடிகேளோ
தன்போல் காமன் சாப முடித்தால் தாழ்வுண்டே
முன்போர் காமன் சாபம தனைத்து முடித்தாய்க்கே.

(கு - ரை.) இது, தலைவி கூறியது. என்போல்வார் - என் போன்ற மகளிர். அடிகேளோ - அடிகளே. தன்போற் காமன் - தனக்குத் தானே உவமிக்கப்படுங் காமன்: ஈடில்லாத காமனென்றவாறு. சாபம் முடித்தல் - வில்லை யொழித்தல். முன்பு ஓர் காமன் - முன்பு ஒப்பற்ற கற்பகச் சோலைக்கு அரசனாகிய இந்திரன். அவன் சாபம் - அவனுக்கு நேர்ந்த பிரமகத்தி தோஷம்: அன்றி அவனுக்குத் துருவாசரால் கொடுக்கப்பட்ட சாபமுமாம்.

## நேரிசையாசிரியப்பா

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவர வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கால நாரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைமபுனல் மூழ்கிப பதும பீடத்
தூற்றமில் தாமும் உலப்பில பஃறவம்
வீற்றுவீற் றிருந்து நோற்பன கடுக்குங்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் தண்டுறைச் சங்கமும்
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டியல் தேர்ந்தன செல்லும்

தடம்பணை உடுத்த தண்டமிழ்க் கூடல்
இடங்கொண் டிருந்த இமையா முக்கட்
கருமிடற் றொருவனின் திருவடி வழுத்துதும்
தாய்நலங் கவருபு தந்தையுயிர் செகுத்தாங்
கிருபெருங் குரவரின் ஒருபழி சுமந்த
புன்றொழில் ஒருவற்குப் புகலின்மை தெரீஇ
அன்றருள் சுரந்த தொன்றே சென்றதோர்
வலியாற் கருள்வதூஉ நோக்கி
எளியார்க் கெளியைமற் றென்பது குறித்தே.

(கு - ரை.) முள்தாள் - முள்ளையுடைய நாளம். பாசடை - பசிய இலை. கமலதது - தாமரையில். இரைவர - இரையாகிய மீன் வரும்வரை. உறங்கும் - உறங்குவனபோலிருக்கும். குருகு - இங்கே நாரைகள். இங்கே கிடைத்ததென்று கருதி யென்க. ஊற்றம் - பற்றுக்கோடு: அஃதாவது இறைவனை யன்றி வேறு பற்றுக்கோடு. உலப்பு - கெடுதல். வீற்று வீற்றிருந்து - தனித் தனி யிருந்து. கடுக்கும் பட்டத்தென்க. பட்டம் - குளம். தண்டுறைச சங்கம் - சங்கப் புலவர்கள். துறையென்றது அகம் புறமென்னும் பொருட் பகுதிகளை. ஒண்டுறைச சங்கம் முத்துக்களைத் தன்னகத்தே கொண்டு (நீரிலேயன்றிச) சோலையில் இயங்குதலின்றிச சிறந்த இசையின் இயல்களைத் தேர்கின்றன; தண்டுறைச சங்கம் முத்தகச் செய்யுட்களைப் பயின்று காவியங் களைக கற்றுப் பாட்டியல் நூல்களைத தேர்கின்றன வென்க. முத்தகம் - தனித்து நின்று முடியுஞ் செய்யுள். பணை - வயல். தாய் நலம் கவருபு .. ..ஒருவன் - இதனைத் **திருவிளையாடற் புராணத**தில் **மாபாதகந் தீர்த்த பட**லததிற் காண்க. வலியான் - கரிக்குருவி. குறித்து வழுத்துதுமென முடிக்க. நாரைக்கு வீடு பேறு கிடைத்தமையும் வலியாற் கருளியதும் **நாரைக்கு முத்தி கொடுத்த பட**லத்திலும் **கரிக் குருவிக் குபதேசஞ் செய்த பட**லத்திலும் காண்க. அஎ

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

குறுமுயலுஞ் சிலகலையும் இழந்தொருமான் உயிரைக்
கொள்ளைகொள்ள எழுந்தமதிக் கூற்றே ஆற்றாச்
சிறுதுயிலும் பெருமூச்சும் கண்டிரங் கலையால்
தெறுமறலி நீயேயித் தெண்ணி லாவும்

எறியுநெடும் பாசமே உடலுமறக் கூனி
இருணிறமும் முதிர்நரையால் இழந்தாய் போலும்
நறுநுதலார் என்கொலுனை மதுரேசர் மிலேச்சு
நாகிளவெண் திங்களென நவில்கின் றாரே.

(த - ரை.) இது, **பாங்கி கூற்று:** முயல் - திங்களிடத்துக் காணப்படும் களங்கம்: இதனை மானென்றுங் கூறுப. கலை - திங்களினுடைய பகுதி; பிறைத் திங்களினிடத்துக் களங்கமும் மற்றைக் கலைகளுங் காணப்படாமையால் அவற்றை அவனிழந்ததாகக் கூறினாள். மதிக்கூற்றே - திங்களாகிய கூற்றுவனே. சிறுதுயிலும் பெருமூச்சும் தலைவன் பிரிந்தமையால் தலைவிக்கு உண்டாயின. நீயே கூற்றுவன்; உன்னுடைய கதிர் கூற்றுவன் வீசுகின்ற 'பாச' மென்க. கூற்றுவனாயின் உடனிமிர்ந்து கருநிறங்கொள்ள வேண்டுமேயெனின், அஃதொகாகும்: ஆயினும் நரையினால் கூற்றுவன் உடல் வளைந்து நிறம் வெளிறினன்போலுமென்று கூறினாள். இங்ஙனமாகவும் இளம் பெண்கள் உன்னை இளவெண்திங்களென்று கூறுதலென்னை யெனப் பாங்கி கூறினாள்: செவிலி கூற்றுமாம். அஅ

## தாழிசை

நவ்வியங்கண் மானுமானும இனிதுகந்தி டங்கொள்வார்
நஞ்சமார்ந்தென் நெஞ்சமார்ந்து நனிகளங்க றுத்துளார்
கைவ்விளங்கு குன்றுமன்றுங் கோவிலாக்கு னித்துளார்
கன்னிநாடர் மதுரைவாணர் கயிலைவெற்பர் வெற்பனீர்
கொவ்வைவாய்வி ளர்ப்பமைக்க ருங்கணுஞ்சி வப்பவே
குளிர்தரங்க வைகைநீர்கு டைந்துடன்றி ளைத்திராற
பைவ்விரிந்த அலகுலீர்நும் அன்னைமாகள் சங்கையிற்
படிலவர்க்கு வீணினீவிர் பரிகரித்தல் பாவமே.

(த - ரை.) **நீர் விளையாடல் செய்யும் மகளிரை நோக்கித் தலைவி கூறியது:** கண்மான் - உமையம்மையார். மான் - கரத்திலேயுள்ள மான். நஞ்சமார்ந்து களம் கறுத்துளார் நெஞ்சமார்ந்து களங்கு அறுத்துளா ரென்க. குன்று - மேரு. அதனைக் கோ வில்லாக் குனித்துளார். கோ வில் - சிறந்த வில். மன்று - சபை, அதனைத் தமக்குக் கோவிலாக் கொண்டு கூத்தாடினர். திளைத்திர் - விளையாடுகின்றீர். பை - பாம்பின் படம். அன்னைமார் - ஆட்டுவாள் ஊட்டுவாள் முதலிய தாயரைவர்;

சங்கையிற்படில் - ஐயப்பாடு கொண்டால். சந்தயப்படி லென்பதும் பாடம். பரிகரித்தல் - நீக்குதல். இங்கே நீக்கிக் கொள்ளுதற் குரியராகுதல். பாவம் - கொடுமை. நீராடினார்க்கும் தலைவனைக் கூடினார்க்கும் வாய் விளர்த்தல் கண் சிவத்தல் முதலியன ஒப்ப நிகழ்வன. நீராடியதனால் வாய் விளர்த்துக் கண் சிவந்த உங்களைத் தாய்மார் தலைவனைக் கூடினீர்களாக ஐயப்படில் அதனை நீக்குதற் குரியராய் நீங்களாகுதல் பாவமென்றவாறு. கொழிதரங்க மென்பதும் பாடம். வள்ளியம்மையார் முருகக் கடவுளைக் களவிற் புணர்ந்து புனத்தில் வந்த காலத்துப் பாங்கி அவரது நிலை வேறுபாடு நோக்கி அதன் காரணம் வினவ, வள்ளியம்மையார் தாம் நீராடச் சென்றதாகக் கூறினர். கேட்ட பாங்கி 'மைவிழி சிவப்பவும் வாய் வெளுப்பவு, மெய்வியா வடையவு நகிலம் விம்மவுங், கைவளை நெகிழவுங் காட்டுந் தண்சுனை, எவ்விடை யுளது' என்று வினவினமை அறியற்பாலது. திளைத்திரால் - திளைத்தீரில்லையே என்றும, பாவம் - பாவனை யென்றும் பொருள் கொண்டு அதற் கேற்பத் தலைவனைக் கூடி வந்தாராயினும் நீராடி வந்தார் போன்று நிற்கும் தலைவியரை நோக்கிக் கூறியதாகவுங் கூறுப.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பாமிக்குப் பயில்மதுரைப பரஞ்சுடரே ஒருத்திகயற்
பார்வை மட்டோ
காமிக்கு மடந்தையர்கட் கயலெலாம் உமையடைதல்
கணக்கே அன்றோ
மாமிக்குக் கடலேழும் வழங்கினீர் ஒருவேலை
மகனுக் கீந்து
பூமிக்குட் கடலைவறி தாக்கினீர் பவக்கடலும்
போக்கினீரே.

(கு - ரை.) பா - பாட்டு. ஒருத்தி - மீனாட்சியம்மையார். காமித்தல் - விரும்புதல். கணக்கு - முறைமை. மாமிக்குக் கடலேழும் வழங்கியதை **எழுகடலழைத்த படலத்திற்** காண்க. வேற்படையால் உக்கிரகுமார பாண்டியர் கடலை வறிதாக்கினமை **கடல் சுவற வேல்விட்ட படலத்திற்** காண்க. மீன்களுக்குப் பற்றுக் கோடாகிய கடல்களனைத்தையும் ஒழித்துவிட்ட உம்மை மீன்களெல்லாம் வந்து அடைதல் முறைமையன்றோ எனத் தலைவி வல்லமை காட்டிக் கூறினாள். அல்லது மீன்கள் நீருள்ள விடத்தன்றி எல்லாக் கடல்களையும் வற்றச் செய்த நும்மிடத்து எவ்வாறு வந்துகூடும் என்றற்கு இங்ஙனம் கூறினளென்றலுமாம். கட்கயல் : உருவகம்.

### மேற்படிவிருத்தம்

நீரோடு குறுவெயர்ப்பும் நெருப்போடு நெட்டுயிர்ப்பும்
நெடுங்கண் ணீரிற்
பீரோடு வனமுலையுங் குறையோடு நிறையுயிரும்
பெற்றா ளன்றே
காரோடு மணிகண்டர் கடம்பவனச் சொக்கர்நறை
கமழ்பூங் கொன்றைத்
தாரோடு மனஞ்செல்லத் தளையோடுந் தான்செல்லாத்
தமியள் தானே.

(து - ரை.) இது, தலைவியின் நிலைகண்டு பாங்கி கூறியது; செவிலி கூறியதுமாம்: வெயர்ப்பும் உயிர்ப்பும் முலையும் உயிரும் பெற்றாளென்க. நீர் ஓடு குறு வெயர்ப்பு - ஓடுகின்ற சிறு வேர்வை நீர்த்துளி. நெருப்புப் போன்ற மூச்சு. கண்ணீரோடு பசலை பொருந்திய அழகிய கொங்கை. குறையால் நிரம்பிய உயிர். காரோடுதல் - கருநிறம் பொருந்துதல். தளை - தாய்; இது தள்ளை யென்னுந் திசைச்சொல்லின் இடைக்குறை. அவட்கு அவன் தளையாயிருத்தல் பற்றி வந்த ஆகுபெயரென்பாருமுளர். தெருவிலே தலைவன் வரும் 'பவனி' கண்டாள் தன் நெஞ்சந் தாரோடு சென்றமையின், தாயோடு வீட்டுட் செல்லாது தமியளாய் நின்றாளென்க. தளை விலங்கெனக் கொண்டு விலங்கு பூட்டினாற் போல இடம்பெயராது தமியளாய் நின்றாளென்றலுமாம். ௬௧

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிர னெனப்பேர்
கொண்டது நந் தண்டமிழ் மதுரங்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்

பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் பளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றில் தூநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா

தமரர்நா டியரோ டம்மனை யாட
ஐயநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூடல்
அடலரா அலங்கல்வே ணியனே.

(கு - ரை.) தமரம் - ஒலி. ஈன்றாள் - உமையம்மையார். தரிக்க வருதல் - தரிக்குமாறு வந்தருளல். வழுதியாகிய உக்கிர னென்க. கூட்டுண்ணுதல் - கொள்ளையிட்டுண்ணுதல். தெளி தமிழ் - தெளிக்கப்பட்ட தமிழ். பமரம் - வண்டு. யாழ்மிழற்ற - யாழொலி போல ஒலிக்க. நறவு - தேன். குழலியர் - குழலை யுடைய நிலவுலக மகளிர். பளிக்குப் பால்நிலாமுன்றில் - பளிங்குக் கற்களினாலாகிய வெண்மையான நிலாமுற்றம். இமையாடா திருத்தற்கு ஏது அம்மானையாடலிலுள்ள நெஞ்செழுச்சி. அமரர் நாடியர் - அமரர் நாட்டிலுள்ள பெண்கள். ஐயம் நுண் நுசுப்பு அளவு அல என்று மருளுதலாவது இதற்குமுன் உண்டோ இல்லையோ என்னும் ஐயம் பெண்களது இடையளவிலே யிருந்தது; இப்பொழுது இவர் நிலவுலக மகளிரோ விண்ணுலக மகளிரோ வென்னும் ஐயம் உடல் முழுமையும் உண்டாயினமையின் மயங்குதல். அமரரும் - மக்களேயன்றித் தேவரும். குழலியர் பமரம் யாழ்மிழற்ற நறவு கொப்பளிக்கும் பனிமலர் சூடினமையின் நிலவுலக மகளிரென அறியப்படுதலாமே யெனின், அம்மனையாடுதலினுளதாம் அதிர்ச்சியின் அவையகன்று நீங்கினவாதலின், அறிதல் இயலாததாயிற் றென்க. அரா - பாம்பு. அலங்கல் - மாலை. வேணி - சடை. இது தமிழின் சிறப்புக் கூறியவாறு.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அடுத்தங் குலவாக் கோட்டைசுமந் தளித்தீர்
ஒருவற் கதனிற்கத்
தொடுக்குங் கணைவேள் தனக்குலவாத் தூணி
கொடுத்தீர் போலுமால்

எடுக்குங் கணையைந் தெய்தகணை
எண்ணத் தொலையா தென்செய்கேன்
திடுக்கங் கொளமால் சிலைமதனைச்
சினத்தீர் கடம்ப வனத்தீரே.

(கு - ரை.) இது, **தலைவனைப் பிரிந்த தலைவி கூறியது; தலைவனோடு தலைவி வருத்தமிகுதி கூறிய தென்றலுமாம்**: உலவாக் கோட்டை - கெடாத அரிசிக்கோட்டை. ஒருவன் - அடியாாக்கு நல்லார் என்னும் சிவனடியார். அவருக்கு சோமசுந்தரக் கடவுள் உலவா அரிசிக்கோட்டை அருளியதை **உலவாக்கோட்டை யருளிய படலத்திற்** காண்க. வேள் - காமன். தூணி - அம்பறாத்தூணி. வேள் எடுக்கு மு கணை - காமன் எய்தற்கு எடுக்கும் அம்பு. மால் காமன்றன் தந்தையாதலின் அத்தந்தை மகன்றுயரால் திடுக்கங் கொளுமாறு சிவபெருமான் சினந்தா ரென்க. அடியார்கள் பொருட்டுப் பொருளின்மை பற்றி வருந்தினார் ஒருவர்க்குக் கோட்டை கொடுத்தீர்; ஆனால் பயனின்றிப் பிறரை வருத்தும் ஒருவனுக்குத் தூணியே கொடுத்தீர் போலும்; வருத்தும் ஒருவனுக்கு நீர் கொடுத்தது அளவிற் குறைந்ததேனும் உலவாத தூணியாகலின் அளவிற் குறைந்ததும் மிகுந்ததும் ஒன்றே யாயிற்று. இங்ஙனம் கொடுத்தல் தக்கதன்றே என்றவாறு. கூ௩

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கடமுடைய நறுநெய்க்குள் முழுகியெழு வதையொத்த
கரடமத கரிபெற்றோர் பிடியேபோல்
மடவநடை பயில்பச்சை மலையிலொரு புறம்வைத்த
மதுரையழ கியசொக்கர் வரைவேலோய்
நடையுமெழு துவைநிற்கு நிலையுமெழு துவைசொற்குள்
நலமுமெழு துவைசித்ர ரதிபோல்வாள்
இடையுமெழு துவைமுற்றும் இலதொர்பொரு ளையுமொக்க
எழுதிலெவர் உனையொத்த பெயர்தாமே.

(கு - ரை.) இது, **தோழி கூற்று**: தலைவன் தலைவியின் வடிவத்தைப் படத்தி லெழுதிக் கையிற் கொண்டு மடலேறக் கருதுதலும் அஃதறிந்த தோழி தலைவியின் நடை, நிற்குநிலை, சொன்னலம் முதலியனவற்றையும் நீ எழுதவல்லாயல்லை யென்று கூறித் தடுத்தல் இச்செய்யுள். இஃது எழுதலரிதென விலக்கலாகிய துறை. கரடம் - கன்னம். கரி - யானைமுகப் பிள்ளை

யார். அவரது மதப்பெருக்கு அவர் குட முடைந்து வழிகிற நறு நெய்யுள் முழுகி யெழுகின்று ரெனக் கருதுமாறு வழிகின்ற தென்க. மடவம் - மடப்பம்; அஃதாவது அழகு. பச்சை மயில் - மீனாட்சியம்மையார். வேலோய் என்றது தலைவனை. எழுதுவை என்பது குறிப்பால் எழுதமாட்டாயென்னும் எதிர்மறைப் பொருளைத் தந்தது. நடை முதலியன வடிவமில்லாதனவாகலின், அவற்றிற்கு வடிவமில் பொருள்களை யெழுதுதல் வேண்டும்; அவ்வாருயின் எழுதுதலே யியலாதென்றவாறு. எழுதில் உனை யொத்த பெயர் எவர்தா மென்க. ௬௪

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந் தமிழ்க்கூடல்
விகிர்த கேண்மோ
ஏதமில்நின் திருவுருவொன் றிருருவாய் நின்றதினும்
இறும்பூ தந்தோ
போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத் தொருவனிரு
பூவை மார்க்குக்
காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு
காட்சி தானே.

(கு - ரை.) கலை - நூல்கள். போர்த்தல் - நிரப்புதல். வளர்தல் - மிகுதல். பல ஆடைகளைப் போர்த்து அறம் கண் வளர்கின்றதென்னும் பொருளும் விளங்குதல் காண்க. விகிர்தன் - வேறுபாடுடையோன். நினது வடிவத்தில் ஒரு பாதி ஆணும் மற்றொரு பாதி பெண்ணுமாக விருப்பதே எமக்கு மிக்க வியப்பைத் தருகின்றது; திருமால் திருமகள் நிலமக ளென்னும் இருமனைவியர்க்குங் கணவனுகி உனக்கு ஓர் மனைவியாயிருப்பது அவ்வியப்பினும் வியப்பாயிருக்கின்றது என்பதாம். திருமால் சிவபெருமானுடைய நால்வகைச் சத்திகளுள் ஒரு 'சத்தி'யாதல் பற்றிக் கூறிய தென்க. தாருகவனத்து நிகழ்ச்சியும் இங்கு நினைவு கூரற்பாலது. ௬௫

நேரிசைவெண்பா

காண்டகைய செல்வக் கடம்பவனத் தானந்த
தாண்டவஞ்செய் தாண்டவர்நீர் தாமன்றே—பூண்டவியர்
உள்ளத் திருப்பீரெம் உள்ளத்தை யும்முமதா
மெள்ளத் திருப்பீர் மிக.

(கு - ரை.) காண் தகைய - யாவரும் விரும்பிக் காணுந் தகுதியுடைய. ஆனந்த தாண்டவம் - பேரின்பக் கூத்து. ஆண்டவர் - மீளா ஆளாக அடிமை கொண்டவர். பூண்டு - காதல் கொண்டு. மெள்ளத் திருப்பீர் - மெல்லத் திரும்பும்படி செய்வீர். மெல்ல, மெள்ள என வந்தது லள ஒற்றுமைப் போலி. அலமரு, அளமரு; பொள்ளா, பொல்லா என வருவன காண்க. ௬௬

## கட்டளைக்கலித்துறை

மிக்கார் முகத்தருள் கூடற்பி ரான்விட நாண்துவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலும்
இக்கார் முகக்க எழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீர் உகாந்த சலதியையே.

(கு - ரை.) கார் காலத்து மீண்டு வருவேனெனக் காலங் குறித்துச் சென்ற தலைவன் வினைமுடித்து மீண்டு வரும்போது தன் முன் மேகஞ் செல்வது நோக்கி, இவற்றைக் கண்டு தலைவி வருந்துவாளே என்று கருதிப் பாகனுடன் கூறியது இச்செய்யுள். மிக்கார் முகதது - அன்பின் மிக்க அடியார்களிடம். கைக் கார் முகம் - கையிலுள்ள வில்லாகிய மேருமலை. விடநாண் - நஞ்சினையுடைய நாணாகிய 'ஆதிசேடன்' என்னும் அரவு. அது துவக்காக் கார்முக மென்றது மேருவின் இயற்கையுயர்ச்சியை யுணர்த்தும் பொருட்டு. அதனைப் போன்ற தேரென்க. வலவன் - பாகன். கை பரததல் - இடத்திற் பரவுதல். கார் - மேகம். இக்கார் கண்ணீராகிய உகாந்த சலதியை முகக்க எழுந்த கொலாம் என்க. எமது ஆவியென்னத் தக்காரென்றது தலைவியை. முகத தடங் கண் - முகத்திலுள்ள அகலமான கண்கள். உகாந்தம் - யுகத்தின் முடிவு; ஊழிமுடிவு. சலதி - கடல். ௬௭

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்த மிசையே
மலரா கிடந்த நயனார விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி உடலே சுமந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது மின்றெ ரிவதே.

(கு - ரை.) இது, தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறியது: சலராசி - இங்கே பாற்கடல். கணை - குமால். கணையை முப்புரத்தை யெரித்தற்கு ஏவிய திருத்தோளுடையவ ரென்க. சரணாரவிந்தம் - திருவடித்தாமரை. மலராகிடந்த நயனாரவிந்தர் - மலராகுமாறு இடக்கப்பட்ட நயனத்தாமரையை யுடையவர்

மலராக - அகரந் தொகுத்தல் விகாரம் பெற்றது. மலராகிடு அந்த நயன மெனவும், மலர் ஆகு இடந்த நயனமெனவும், மலரா கிடந்த நயன மெனவும் பிரித்துப் பொருள் கூறுவாரு முளர். புகலார் - சொல்லார். திரிவார்களாகிய சில ரென்க. ஆவியின்றி உடல் சுமந்து திரிவாரென்றது கணவரைப் பிரிந்து தனித்திருக் கும் மகளிரை. விழ - விழுமாறு. புலராத கங்குலென்றது காம வேட்கையால். அங்கி - நெருப்பு; இங்கே திங்கள். புகையாது எரிதலாவது - இருள் கவியப் பெருமை. ௯௮

## தாழிசை

தேன்வழங்கு கடுக்கையார்கரு மான்வழங்கும் உடுக்கையார்
திருவிருந்த விடத்தினாருள் கருவிருந்த நடத்தினார்
மானடங்கிய அங்கையார்சடைக் கானடங்கிய கங்கையார்
வைகையொன்றிய கூடலாரிவள் செய்கையொன்றையு நாடலார்
கானவேயிசை கொல்லுமாலுற வானவேய்வசை சொல்லுமாற்
கன்றியன்றில் இரங்குமாலுயிர் தின்றுதென்றல் நெருங்குமால்
தீநிலாவனல் சிந்துமாற்கொல வேனிலான்மெல மூந்துமால் [மே.
தினமிடைந்திடை நொந்தபோன்மகள் மனமிடைந்த துணர்ந்து

(கு - ரை.) இது, **செவிலி யிரங்கல்: பாங்கி யிரங்கலுமாம்:** கடுக்கை - கொன்றை மாலை. கருமான் - யானை. உடுக்கை - ஆடை. திரு - இங்கே உமையம்மையார்: 'திருமாதோ டுறை கோயில்' என்றாற்போல. இடத்தினார் - இடப் பாகத்தை யுடைய வர். அருளானது குடிகொண்டிருந்த கூத்து என்க. நாடலார் - நாடுகின்றாரல்லர். கானம் - பாட்டு. வேய்இசை - புல்லாங்குழலி ஞேசை. உறவான - சுற்றமான. வேய்வசை - மூடுகின்ற பழிச் சொல். அன்றிற் பறவை இவளைக் கன்றுவித்து ஒலிக்கும். வேனி லான் - காமன்; வேனிற் காலத்துக்கு உரிமை பூணுதல்பற்றி அவன் அப்பெயர் பெற்றான். மெல - மெல்ல. இடை, இடைந்து நொந்தது போல் நெஞ்சம் இடைந்த தென்க. ௯௯

௱

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

உடையதொர் பெண்கொடி திருமுக மண்டலம்
ஒழுகு பெருங்கருணைக்
கடலுத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புள
கடவுள்நெ டும்பதியாம்

புடைகொள் கருங்கலை புனைபவள் வெண்கலை
புனையுமொர் பெண்கொடியா
வடகலை தென்கலை பலகலையும்பொலி
மதுரைவ ளம்பதியே.

(கு - ரை.) உடையதொர் பெண்கொடி - மனைவியாகவுடையதாயிருப்பதொரு கொடி போலும் பெண் ; அவள் உமையம்மை. அவளுடைய முகமண்டலத்துக் கயல் என்க. கயல் - கண்ணை புணர்த்திற்று. இக் கயல் கடலுதவுங் கயலன்றிக் கடலையுதவுங் கயலென வியந்தவாறு. அது பொரும் மொய்ம்பு - உமையம்மையாரது தண்ணோக்கம் பாய்கின்ற திருத்தோள். புடை கொள் கருங்கலை புனைபவள் - நிலமகள். அவள் கலைமகளாகும்படி வட கலை முதலியன பொலியும் மதுரை யென்க. வடகலை முதலியன பொலிதற்கு ஏது முன் எ௮-வது செய்யுளுரையிற் கூறப்பட்டது.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வள்ளைவாய் கிழித்துக் குமிழ்மறிந் தமர்த்த
மதரரிக் கண்ணியு நீயும்
மழலைநா றமுதக் குமுதவாய்க் குழவி
மடித்தலத் திருத்திமுத் தாடி

உள்ளநெக் குருக உவந்துமோந் தணைத்தாங்
குகந்தனிர் இருத்திரால் உலகம்
ஒருங்குவாய்த் தீருக் கொருதலைக் காமம்
உற்றவா என்கொலோ உரையாய்

வெள்ளிவெண் ணிலவு விரிந்தகோ டீரம்
வெஞ்சுடர்க் கடவுளுங் கிடைத்து
வீற்றிருந் தனைய விடுசுடர் மகுடம்
மீக்கொளூஉத் தாக்கணங் கனையார்

கள்ளவாட் கருங்கண் ணேறுகாத் திட்ட
காப்பென வேப்பலர் மிலைச்சும்
கைதவக் கனிறே செய்தவக் கூடற்
கண்ணுதற் கடவுள்மா மணியே.

(கு - ரை.) வள்ளை - காதை யுணர்த்திற்று. வாய் கிழித்த லாவது அதனை யளாவுத லென்றவாறு. குமிழ் - மூக்கை யுணர்த் திற்று. அமர்தல் - போர்செய்தல். மதரரிக்கண் - தளிர்த்துச் செழித்த செவ்வரிபடர்ந்த கண். குழவி யென்றது முருகக் கடவுளை. ஆங்கு - அவ்வாறே. இது 'சோமாஸ்கந்த' வடிவத்தை வியந்தவாறு. ஒருதலைக் காமம் - ஓரிடத்துக் காமம்; இங்கு ஒரு குழந்தையிடத்து விருப்பம். உலகமெல்லாம் பெற்ற உங்கட்கு ஒருதலைக் காமம் வந்தவாறென்னை யென்னும் பொருளும் விளங்குதல் காண்க கோடீரம் - சடைமுடி. சிவபிரானது கோடீ ரத்து மகுடத்தின பேரொளிப் பரப்பினால் திங்கட்குரிய அக் கோடீரம் சூரியனுக்குங் கிடைத்ததோவென் றெண்ணுத லாயிற்று. மீக்கொளூஉ - மேற்கொண்டு. தாக்கு அணங்கு அனையார் - தீண்டி வருத்துந் தெய்வம் (மோகினி) போன்ற பெண்டிர்; திருமகள் போன்ற வடிவழ குடைய பெண்டிருமாம். கண்ணேறு - 'கண் திட்டி தோஷம்.' காப்பு - பாதுகாப்பு. வேப் பலர் - வேப்பமாலை. மிலைசசும் - சூடும். கைதவக் களிறு - பாண்டிய மரபுக்குக் களிறு போன்றவர். செய்தவக் கூடல் - செய்து முற்றிய தவத்தினையுடைய மதுரை. மீக்கொளூஉ மிலைச் சும் களிறென்க. மீக்கொள வென்பதும் பாடம். ௧௦௧

## நேரிசையாசிரியப்பா

கட்புலங் கதுவாது செவிப்புலம புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத் தொருபரி உகைத்தோய்
புட்கொடி யெடுத்தொரு பூங்கொடி தன்னொடு
மட்கொடி தாழ்ந்த வான்கொடி உயர்த்தோய்
ஓரேழ் ஆழி சீர்பெறப் பூண்டு
முடவுப் படத்த சுடிகையுட் கிடந்து
நெடுநிலை பெயரா நிலைத்தே ரூர்ந்தோய்
மீனவர் பெருமான் மானவேல் பிழைத்தாங்
கெழுபெருங் கடலும் ஒருவழிக் கிடந்தென

விண்ணின் றிறங்குபு விரிதிரை மேய்ந்த
கொண்மூக் குழுமலைக் கோலமதக் களிற்றொடும்
வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்
காற்றல்கொ டுற்றபா கலைத்தனர் பற்றத்
திரியுமற் றெம்மைத் தீச்சிறை படுக்கெனப்
பரிதிவேல் உழவன் பணித்தனன் கொல்லென
மெய்விதிர்த் தலறுபு வெரீஇப்பெயர்ந் தம்ம
பெய்முறை வாரி பெயும்பெயல் அல்ல
நெய்பால் தயிர்முதற் பல்பெயல் தலைஇப்
பெருவளஞ் சுரந்த விரிதமிழ்க் கூடல்
இருநில மடந்தைக் கொருமுடி கவித்தாங்
கிந்திரன் அமைத்த சுந்தர விமானத்
தருள்சூற் கொண்ட வரியிளங் கயற்கண்
மின்னுழை மருங்குற் பொன்னொடும் பொலிந்தோய்
துரியங் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத் தொருபெருங் கோயிலுள்
முளையின்று முளைத்த மூல லிங்கத்
தளவையின் அளவா ஆனந்த மாக்கடல்
நின்பெருந் தன்மையை நிகழ்த்துதும் யாமென
மன்பெருஞ் சிறப்பின் மதிநலங் கொளினே
பேதைமைப் பாலரே பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
இனையநின் றன்மைமற் றெம்ம னோரும்
நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழியெம் பெருமநின் தகவே
வாழியெம் மனனும் மணிநா வும்மே.

(கு - ரை.) கட்புலம் - கண்ணாகிய புலம். கதுவுதல் - புலப்படுதல், அஃதாவது நெஞ்சிலாதல். வேதம் ஒலிமயமாதலின் கட்புலத்திற்குக் காணப்படாது செவிப் புலததிற் புகுந்தது. துஞ்சுதல் - தங்குதல். செந்நாமுற்றம் - செவ்விய நாவாகிய முற்றம்; 'அறங்கரை நாவி னான்மறை முற்றிய' என்று **பனம்பாரனார்** கூறியதும் இங்கே கருதத் தக்கது. சிவந்த நாக்கு என்று பொருள் கோடல் சிறப்பின்று. பல வேறு வண்ணம் - பலவகைப்பட்ட சந்தம் (சந்தசு). பரியென்றது வேதததை. புட்கொடி - கருடக்கொடி. எடுத்த என்பதன் அகரம் தொகுத்தல் விகாரம் பெற்றது. பூங்கொடி - திருமகள். மட்கொடி - பூமகள். எடுத்த வான்கொடி - இவ் விருவரும் தாங்கிய வான்கொடி. ஆழி - கடல். தேரென்றதற்கேற்ப உருள். முடவு - வளைவு. சுடிகை - 'ஆதி சேட'னது உச்சி. நெடிய நிலைத்தற்றொழில் நீங்காத நிலைத்தேரென்க. நிலைத்தேர் - நிலம். மீனவர் பெருமான் - உக்கிரகுமார பாண்டியர். மானம் - பெருமை. மதுரையிலுள்ள எழுகடற்றுறையைக் கடலெனக் கருதி மேகக்குழு மேய்ந்த தென்க. எழுகடல் மதுரையில் வந்த வரலாற்றை **எழுகடலழைத்த படலத்**திற் காண்க. சோமசுந்தரக் கடவுளால் மாமியாரா காஞ்சனமாலையின் பொருட்டு அழைக்கப்பட்ட எழுகடல் அவர் திருமகனாகிய உக்கிர பாண்டியர் வேலுக்குப் பிழைதது வந்ததெனக் கூறினார். இறங்குபு - இறங்கி. கொண்மூக் குழு - மேகக் கூட்டம். மின்னுக் கொடி - மின்னலாகிய கொடி. பாகு - பாகர். அலைத்தனராய்ப் பற்ற என்க. யானைப் பாகர்கள் எழுகடற்றுறையில் நீர் குடிக்க வந்த யானைகளுக்கும் அஙகுத திரைமேய வந்த கொண்மூக்களுக்கும் வேற்றுமை தெரிய வியலாமையால் கொண்மூக்களை யானைகளென்று பற்றின ரென்க. பரிதி வேல் உழவன் - கதிரவன் போன்ற ஒளியினையுடைய வேற்படை வீரன் என்றது, உக்கிர குமார பாண்டியனை. அலறுபு - அலறி. வெரீஇ - வெருவி. பெய்முறை - பெய்யும் முறைப்படி. வாரி பெயயும் பெயல் - நீரைப் பெய்யும் மழை. நெய் முதலியன பெய்தற்கு ஏது எழுகடல் மேய்தல். பெயல் தலைஇ - மழையைப் பெய்து விடுதலால். 'தலைப் பெயறலைஇய தண்ணறுங் கானதது' என்பது **திருமுருகாற்றுப்படை**. கூடலாகிய மடந்தை யென்க. மின்நுழை மருங்குல் - மின்னல்போன்ற நுண்ணிய இடை. பொன் - மீனாட்சியம்மையார். துரியம் - துரியநிலை. துவாதச அந்தம் - 'பிரமரந்திர'த்தின் மேற் பன்னிரண்டு விரற்கிடையுள்ள இடம். உலக வடிவமான 'விராட் புருட'னுக்கு மதுரை 'துவாதசாந்தஸ்தான'மாம். வளாகம் - வெளியிடம். 'முளையின்று முளைத்த மூல லிங்கம்' என்றதை 'முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி' என்னுந் **திருநாவுக்கரசு சுவாமிகள் தேவார**ததா லறிக. அளவைகளாலே அளக்கமுடியாத. கடல்: விளி, 'வேத புருடனும்

விராட் புருடனு'மாகிய இவர்களே நின் பெருந்தன்மையை யாம் நிகழ்த்துது மென மதிநலங் கொள்ளின், அவர் பெரிதும் பேதை மைப் பாலர்; அங்ஙனமாகவும் நினது அத் தன்மையை எம்மனோ ரும் நினையவும் பாடவும் புரிதலின் நினது அருட்டன்மை வாழ்வ தாக; நினையும் எனது நெஞ்சமும் பாடும் எனது அழகிய நாவும் வாழ்வனவாக என்றவாறு. "நின் பெருந்தன்மை வானவர் தமக்கு நிகழ்த்தரி தாதலின் மனித, னன்பொடும் வழுத்த விழைந்திடி னகையே யடைவதற் கையமின்றேனு, முன்பெயர் கருதும் பெருந்தவ வருவா யொருவழியாற் கிடைத்திடுக, வென்ப தோர் மதிவந் தென்னையீர்த் தெழுமா லெங்கணு நிறைந்தபூ ரணனே" என்பது சிவஞான முனிவரர் திருமொழி. ௧0௨

மதுரைக்கலம்பகம்

மூலமும் குறிப்புரையும்

முற்றிற்று.

# பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அஞ்சேல் | ௩௨ |
| அடுத்தங் குலவா | ௯௩ |
| அடுத்த தோர்தவ | ௨௯ |
| அடுத்த பதஞ்சலியார் | ௫௫ |
| அம்மகோவெனும் | ௧௭ |
| அம்மாநம் | ௪௦ |
| அரங்கு மையற்கு | ௨௯ |
| அருநாமம் | ௨௮ |
| அழகுற்றதொர் | ௨௧ |
| அறந்தந்த | ௧௮ |
| ஆவமே நாணே | ௨௪ |
| ஆவா என்னே | ௪௫ |
| ஆறுதலை | ௧௯ |
| இடங்கொண்ட | ௨௯ |
| இருநிலன அகழ்ந்த | ௨௭ |
| இருவருக்குங | ௧௯ |
| இன்னியந் துவைப்ப | ௪௨ |
| இன்னீரமுது | ௪௮ |
| ஈரமதிக்கும | ௪௪ |
| ஈரித்த தென்றல | ௨௫ |
| உடையதொர் | ௯௭ |
| உண்ணமுத | ௧௪ |
| உண்பதுநஞ்சமால் | ௨௨ |
| எய்யாதுநின்றொருவன் | ௧௯ |
| எறிவேல் இரண்டு | ௧௭ |
| என்போ டுள்ள | ௫௮ |
| ஏடார் புண்டரிக | ௪௧ |
| ஏமவெற் பென்று | ௫௪ |
| ஏனின் றிரங்குதி | ௩௫ |
| ஐய மணிக்கல | ௪௧ |
| ஒன்றே | ௧௨ |
| கடங்கரைக்கும் | ௨௩ |
| கடங்கால் | ௩௧ |
| கடமுடையு நறு | ௯௪ |
| கட்டு வாரகுழ | ௪௭ |
| கட்புலங் கதுவாது | ௯௯ |
| கணடமுங காமா | ௪௩ |
| கணமுத தருமபின | ௩௩ |
| கரிய கண்டங | ௪௪ |
| கரும்பொறி | ௩௪ |
| கருவிட்ட | ௫௭ |
| கரைபொரு | ௨௫ |
| காண்டகைய | ௯௫ |
| தூங்குமசசே ருடுங | ௪௮ |
| குரும்பை வெமமுலை | ௪௦ |
| குறுமுகைவெண | ௩௯ |
| குறுமுயலுஞ் | ௫௯ |
| கூடலம்பதி | ௨௦ |
| கூடாா புரந்தீ | ௩௦ |
| கேளார் புரஞ்செற்ற | ௪௨ |
| கோங்குரை | ௫௦ |
| கொம்மைக | ௨௧ |
| சலராசி தஙகு | ௯௯ |
| சிலைசிலை யாக்கொண்ட | ௫௦ |
| சிலையோ கரும்பு | ௫௯ |
| செல்விட்ட | ௫௨ |
| தடமுண்டகங | ௧௧ |
| தமரநீா | ௯௨ |
| தருமுகத்து | ௫௨ |
| தழைத்திடுங | ௨௦ |
| தனியிருப்பவ | ௧௩ |
| தான வெங்களி | ௩௨ |
| திருவைப் புணர் | ௪௯ |
| தேத்தந்த | ௩௫ |
| தேன்வழங்கு | ௯௭ |
| தேனறுத | ௩௯ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| தொடுத்தணிந்தது | ௨௨ | மதுமலர்க்குழ | ௩எ |
| நகையே | ௩0 | மாற்ருன் | ௧௨ |
| நமபாணினைக்கோல | ௨௪ | மீக்கார் முகத்தருள் | ௬௬ |
| நவ்வியங்கண் | ௬0 | மீனேறுங | ௧௧ |
| நீரோடு | ௬௨ | மூட்டாட் பாசடை | ௫அ |
| பட்டிருக்கத் | ௧௩ | மும்மைத தமிழ் | ௨அ |
| பல்லார உயிர்க் | ௨0 | மேதகைய | ௬௫ |
| பாட்டுக் குருகுந் | ௫௩ | மொழிக்கயலாகி | ௪௫ |
| பாணறு மழலை | ௩௩ | வடகலை | ௫௩ |
| பாமிக்கு | ௬௧ | வரியளிபொதுளிய | ௧௪ |
| புந்திததடதது | ௬ | வரும்புண்ட ரீகம் | ௫எ |
| புயல்வண்ண | ௧௬ | வலங்கொண்ட | ௧௩ |
| புழுகுநெய் | ௩அ | வள்ளைவாய் | ௬அ |
| பைந்தமிழ்த்தேர் | ௩அ | வாணிலாப் பரப்பு | ௩௬ |
| பொருஞன் | ௧௧ | வால விரத்த | ௪எ |
| போரானைமுதுகுறைப்ப | ௧அ | வாழிமடக் | ௫௧ |
| மட்டறுக டறபுவிய | ௫௫ | விற்கரும்பே | ௪௬ |
| மணிகொண்ட | ௬ | வீரம் வைத்தவில் | ௩௧ |

கழக வெளியீடு : உ.கூ

பதிப்பாளர் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை-1.

தலைமை நிலையம்

24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை அணா 12.

அப்பர் அச்சகம், சென்னை-1.